

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 29 ★ 09.06.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com




## சிறீலங்காவில் நரேந்திர மோடி எட்டு அடுக்கு பாதுகாப்புடன் தாக்குதலுக்கு உள்ளான தேவாலயத்தை பார்வையிட்டார்

## பலமான மாற்று அணி ஒன்றிற்கான வாய்ப்பை கஜேந்திரகுமார் பயன்படுத்த வேண்டியதே காலத்தின் தேவை

தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை

## கேட்டது சமஷ்டி, பெற்றது கம்பரலியா இதற்குத்தானா ஆசைப்பட்டாய் தமிழா?

கணிதன்





## நான் பொன் சிவகுமாரன் பேசுகிறேன்

தீபச்செல்வன்

## சீனா-இரசியா எல்லா வகையிலும் ஒத்துழைப்பது அவசியம்

வேல் தர்மா




# பலமான மாற்று அணி ஒன்றிற்கான வாய்ப்பை கஜேந்திரகுமார் பயன்படுத்த வேண்டியதே காலத்தின் தேவை

## விக்னேஸ்வரனின் அழைப்பு குறித்து பரிசீலனை செய்ய வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எப். தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்

### தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை

'சைக்கிள்' சின்னத்தில் தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தாம் தயாராக உள்ளதாக வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வந்திருப்பதை நிராகரித்திருப்பதன் மூலம், பலமான மாற்றுத் தமிழ்த் தலைமை ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்பை கஜேந்திரகுமார் பொன்னம் பலம் இல்லாமல் செய்துவிட்டார் என தமிழ் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளதோடு பலமான மாற்றுத் தலைமை ஒன்று தமிழ் மக்களுக்கு இன்று அவசியமாகவுள்ள நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இந்த நிராகரிப்பு தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே கொடுத்திருப்பதாகவும் ஆய்வு மையம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தாம் தயாராக உள்ளார் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், அப்படி தான் போட்டியிடுவதானால் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனையும் அந்தக் கூட்டில் இணைத்துக் கொள்ளவேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார். இந்த விடயத்தை அவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கிறார். ஆயினும் அந்த நிபந்தனையை உடனடியாகவே நிராகரித்துவிட்டார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரி ஒன்றுக்களித்துள்ள நேர்காணலிலேயே இந்தத் தகவல்களை கஜேந்திரகுமார் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இது தொடர்பாக தமிழ் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் இன்று வெளியிட்டுள்ள

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

# முல்லைத்தீவில் கொளுத்தும் வெயிலில் மக்கள் போராட்டம்

## கூட்டமைப்பினர் சனாதிபதியுடன் கைகோர்ப்பு

சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன நேற்று முல்லைத்தீவிற்கு வருகை தந்த போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்துள்ளார்கள்.



முல்லைத்தீவு மாவட்டத்திற்கு "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" நிகழ்ச்சிக்காக சிறீலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைந்துள்ள 59 ஆவது படைப்பிரிவின் 01 ஆவது படை அணியின் தலைமை அலுவலகத்தில் வந்திறங்கி பாதுகாப்புடன் காரில் மாங்குளம் முல்லைத்தீவு வீதி ஊடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினை சென்றடைந்துள்ளார்.

சனாதிபதி பயணம் மேற்கொண்ட பாதையில் கொளுத்தும் வெயிலிலும் நின்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தை முன்னெடுத்த போது கூட்டடமைபின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிவமோகன் உள்ளிட்டவர்கள் மக்களின் போராட்டத்தை புறக்கணித்து சனாதிபதிக்கு ஆதரவாக நிகழ்வுகளில் பங்கெடுத்திருந்தனர்.

பத்துவருட மௌனம் போதும் நீதி வேண்டும், நாட்டின் சனாதிபதியே எம்மை ஏன் கைவிட்டீர்கள்? இனத்திற்கு ஒரு நீதியா? இலங்கை அரசாங்கமே! யார் பதவியில் இருந்தாலும் பொறுப்பு கூறவேண்டும். போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு அமைப்பினர் தங்கள் கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள். காவல் துறையினரின் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் 824 ஆவது நாளாக போராட்டம் மேற் கொண்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்ட கோரிக்கையினை வலியுறுத்தி இந்த கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள்.



# சிறீலங்காவில் நரேந்திர மோடி எட்டு அடுக்கு பாதுகாப்புடன் தாக்குதலுக்கு உள்ளான தேவாலயத்தை பார்வையிட்டார்





மாலைதீவு நாட்டில் சுற்றுப்பயணத்தை நிறைவுசெய்த இந்தியப் பிரதமர் மோடி குறுகிய கால விஜயத்தை மேற்கொண்டு இன்று முற்பகல் 11.15 மணியளவில் சிறீலங்காவின் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்று அழைத்துச் சென்றார்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட பிரதமர் நரேந்திர மோடி புனித அந்தோனியார் தேவாலயத்திற்குச் சென்று பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தினார். இதன்போது குறித்த பகுதியில் தொலைபேசிச் சேவைகள் முடக்கப்பட்டதுடன் எட்டு அடுக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இதனை தொடர்ந்து சனாதிபதி மாளிகைக்குச் சென்ற மோடிக்கு கொடும் மழையிலும் வரவேற்பு அழிக்கப்பட்டதோடு இந்தியா இலங்கைக்கு இடையிலான நல்லுறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் மோடியும் சிறிசேனாவுடன் பேச்சுவாரத்தையில் ஈடுபட்டனர்

இதனையடுத்து, சிறிசேனா அளிக்கும் மதிய விருந்தில் மோடி பங்கேற்கிறார். பின்னர் இந்திய தூதரகத்திற்கு சென்ற மோடி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சே, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்டோரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

## சர்வதேச நாடுகளின் கொடிகளுடன் தமிழீழ தேசியக்கொடி



*03.06.2019 இத்தாலி ஜெனோவா மாநகரில் "உலக அமைதிக்கான பல்லிணக்க கலாச்சார நடன இசை அமைப்பின்" ஏற்பாட்டில் மாபெரும் நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் தமிழீழ மக்களுக்கும் இடம் தரப்பட்டது. பல நாடுகளை சேர்ந்த மக்கள் பங்கேற்கும் இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியும், பலநாட்டு கொடிகளுடன் ஏற்றி பறக்கவிடப்பட்டது. எமது தேசியக் கொடியானது வானுயர கம்பீரத்துடன் பறந்த காட்சியானது விடுதலை போராட்டத்தின் வெற்றியின் அறிகுறியாகவே பார்க்கமுடிந்தது.*

*எமது குருதியில் உயர்ந்த கொடியும், எமது தியாகத்தில் நிமிர்ந்த கொடியும், எமது இன அழிப்பினில் பிறந்த கொடியும், சிங்கள இனவாத கொடிக்கு நிகராக எமது தமிழீழ தேசியக்கொடி இன்று "இத்தாலி ஜெனோவா", மாநகரில் கம்பீரத்துடன் பறந்தமையானது . உலகம் காலம் கடந்து எமது தமிழ் இனத்தைப் புரிந்து கொண்டுள்ளதாகவே எண்ணமுடிகிறது. நாம் எந்த மக்களினதும் உரிமையை பறிக்கவில்லை. எவரது மண்ணையும் ஆக்கிரமிக்கவில்லை காலம் காலமாய் நாம் வாழ்ந்த மண்ணையும், இழந்த உரிமைகளையும் மீட்கவே போராடினோம். உலகமே எமது தார்மீக உரிமையை இனியாவது அங்கீகரிக்க பின்நிற்காதே. 2009 முள்ளிவாய்க்காலில் எம்மீது நடத்தப்பட்ட இன அழிப்பின் பின்னர், நாம் எவ்வளவோ துன்பங்களிலும், துரோகங்களிலும், மன உளைச்சல்களின் மத்தியிலும் எமது போராட்டத்தின் வீச்சு குறையாமல் கடந்து வந்ததன் பிரதிபலிப்பாகவே இந்த வரலாற்று நிகழ்வு இடம்பெற்றுள்ளது. எந்த ஆக்கிரமிப்பும், அடக்குமுறையும், இன அழிப்பும் எமது விடுதலை போராட்டத்தை தடை செய்யமுடியாது என்பதை இந்நிகழ்வானது நிரூபித்து காட்டியுள்ளது.*

## தமிழர்களுக்கான தீர்வுத் திட்ட முயற்சியிலிருந்து அரசாங்கம் பின்வாங்கிவிட்டது.

### சுரேஷ் பிரேமசந்திரன்

*இலங்கையில் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறும் முன்னரே, தமிழர்களுக்கான தீர்வுத் திட்ட முயற்சியிலிருந்து அரசாங்கம் பின்வாங்கி விட்டது என்றும் இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார். யாழில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "தமிழர்களுக்கான தீர்வு முயற்சி தற்போது தடைப்படவில்லை கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட 4 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. எனினும் அதன் மூலமும் எதுவும் செய்யப்படவில்லை. தற்போது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து அரசாங்கம் மொத்தமாக தமிழர்களுக்கான தீர்வுத் திட்ட முயற்சியிலிருந்து பின்வாங்கி விட்டது. அத்தோடு, அரசாங்கத்தை பாதுகாக்கும் செயற்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக மேற்கொண்டாலும், கூட்டமைப்பின் எந்தவொரு கோரிக்கையையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை" என அவர் குற்றம் சாட்டினார்*

## மோடியின் விஜயமும் தமிழர் அபிலாசையும்

இன நெருக்கடிக்கு நிலையானதும், நியாயமானதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அழுத்தங்களை இந்தியா பிரயோகிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றது. குறுகிய நேரப் பயணம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பின்போதே, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதனை வலியுறுத்தியிருக்கின்றார். கூட்டமைப்பு இந்தியாவிடம் இவ்வாறான கோரிக்கையை முன்வைப்பது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தாலும், அரசியல் தீர்வு முயற்சியில் தான் சம்பந்தப்படுவதை இந்தியா படிப்படியாகக் குறைத்துக்கொண்டே வந்திருக்கின்றது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இந்தியாவுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலும் அதிகரித்துள்ளதால், இலங்கை குறித்த டெல்லியின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா? என்பதுதான் ஆராயப்பட வேண்டிய விடயம். அதேவேளையில், மாற்றமடைந்துள்ள இந்த நிலைமைகளை சிறப்பான முறையில் பயன்படுத்தக்கூடிய இராசதந்திரமோ அதற்கான தீர்க்க தரிசனமோ கூட்டமைப்புத் தலைமையிடம் உள்ளதா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

1980 களின் பிற்பகுதியில் இலங்கை விவகாரத்தில் இந்தியா கைகளைச் சுட்டுக்கொண்டதற்கு, அப்போதைய காங்கிரஸ் அரசின் முதிர்ச்சியற்ற தவறான இராசதந்திரம்தான் காரணம். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளைப் பழிவாங்குவது என்ற இலக்குடன் மட்டுமே இந்தியாவின் 'சவுத் புளொக்' எனப்படும் வெளிவிவகார அமைச்சு செயற்பட்டது. புதுடில்லியின் கைகளைவிட்டு இலங்கை சென்றுவிட்ட நிலைக்கு இந்த இராசதந்திரத் தவறுகள்தான் காரணம். சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் ஆதிக்கம் இலங்கையில் கோலோச்சுவதற்கும் இந்த அணுகுமுறைதான் வழிவகுத்தது. அதன் தொடர்ச்சியைத்தான் இப்போதும் காணக்கூடியதாக இருக்கின்றது.

காங்கிரஸ் அல்லாத அரசு இந்தியாவில் இருப்பது ஈழத் தமிழர்களுக்குச் சாதகமானது என்ற கருத்து உள்ளது. மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றியிருப்பதை ஈழத் தமிழர்கள் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என ஆய்வாளர்கள் சிலர் சொல்ல முற்பட்டிருப்பதும் இதனால்தான். இதில் பெருமளவுக்கு உண்மை இருந்தாலும், கூட்டமைப்பின் தலைமை இதனைப் பயன்படுத்திக்கொள்ளும் இராசதந்திரத் திறனைக் கொண்டுள்ளதா என்பது கேள்விக்குரியதுதான்.

2015 இல் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்தியாவுடனான கூட்டமைப்பின் உறவுகள் பலமானதாக இருக்கவில்லை. மைத்திரி - ரணில் ஆட்சி அனைத்தையும் செய்யும் என்ற நம்பிக்கையிலேயே சம்பந்தனும் சுமந்திரனும் செயற்பட்டார்கள். 2016 இல் ரணில் தீர்வைத் தருவார் என்ற நம்பிக்கையில் சம்பந்தன் செயற்பட்டார். சுமந்திரனும் அந்த நம்பிக்கைக்கு வலுச்சேர்ந்தார். அதனால், இந்தியாவின் முக்கியத்துவம் அவர்களுக்கு குறைந்தது. ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அடிக்கடி டெல்லிக்கு அழைக்கப்பட்டனர். ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவ்வாறான அழைப்புக்களைக் காண முடியவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும், இந்தியா அதன் நலன்களின் அடிப்படையில்தான் அதனைக் கையாளும். அதனை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்திய நலன்களும் எமது நலன்களும் எங்கே இணைகின்றன என்பதைப் பார்த்தே காய் நகர்த்த வேண்டும். ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னரான நிலைமைகள் எமக்குச் சாதகமானவை. ஐ.எஸ். இலங்கையில் திறந்திருக்கும் புதிய களம், பிராந்திய வல்லரசான இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலானது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்தவையாகவும், தமிழர் தரப்பின் பலமான கட்டுப்பாட்டிலும் இருந்திருக்குமானால், இந்தப் பிரச்சினையை தவிர்த்திருக்க முடியும். அதேபோல, எதிர்காலத்தில் உருவாகக்கூடிய அச்சுறுத்தலைத் தவிர்ப்பதற்கு இந்த இணைப்பு அவசியம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டன. அதனை மீண்டும் சாத்தியமாக்குவது இந்தியாவின் நலன்களுக்கும் ஈழத் தமிழர் நலன்களுக்கும் அவசியம்.

குறுகிய நேரப் பயணமாக கொழும்பு சென்ற மோடியுடன், சில நிமிடங்கள் நடத்தும் பேச்சுக்களின் மூலம் இதனை கூட்டமைப்பினரால் சாதித்துவிட முடியாது. ஒரு சில நாட்களில் செய்யக் கூடிய வேலையும் இல்லை இது. அதேவேளையில், இதற்கான வேலைத் திட்டங்களோ, அர்ப்பணிப்பான செயற்பாடுகளோ கூட்மைப்பினரிடம் இல்லை. கடந்த பத்து வருடங்களில் அவர்கள் அதனை நிரூபித்துவிட்டார்கள். அதனால், பலமான ஒரு மாற்று அணி உருவாகுவதன் மூலமாகவே இதனைச் செய்ய முடியும்.

# நிலங்கள் மட்டுமல்ல தமிழர்களின் குளங்களும் சனாதிபதியால் சிங்களவர்களுக்கு தாரைவார்ப்பு

## அநாகரிகமான உடைகளில் சிங்கள பெண்கள் நடனம்
## அரசின் மீதும் கூட்டமைப்பின் மீதும் தமிழ் மக்கள் விசனம்



இலங்கையில் உள்ள பேரினவாதிகள் காலம் காலமாக தமிழர்களின் நிலப்பரப்புகளை அபகரித்து சிங்கள குடியேற்றங்களை முன்னேடுத்து வருவது அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக நிலங்களை முற்றுமுழுதாக அபகரித்து தமிழர்களது பூர்விக பிரதேசமான மணலாற்றை ஒரு தனியான சிங்கள பிரதேச செயலகமாக (வெலிஓயா) அமைக்கப்பட்டதோடு அவர்களுக்கான அனைத்துவிதமான வசதிகளையும் இலங்கை அரசு முழுமையாக வழங்கி வருகிறது.

கடந்த மாசி மாதம் ஓயாமடு என்ற இடத்தில் வைத்து 10000 சிங்கள குடும்பங்களுக்கு சனாதிபதி காணி பத்திரங்கங்களை வழங்கி வைத்தார் இதில் தமிழர்களின் பூர்வீக கிராமங்களான கொக்குளாய் கருணாட்டுகேணி உள்ளிட்ட பல கிரமாங்களிலிருந்து மகிந்த ராஜபச்சவினால் அபகரிக்கப்ப்ட்டு விவசாய நிலங்களை 1000 சிங்களவர்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் 2000 ஏக்கரை வழங்கி வைத்தார் கூட்டமைப்பினால் நெல்சன் மண்டேலா என பேற்றப்பட்ட சனாதிபதி மைத்திரிபாலா சிறிசேனா என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர்கள் தங்களுடைய இழந்த காணிகளை மீட்டுத் தருமாறு கோரி பல்வேறு முறையிலும் போராடி வருகின்ற போதும் குறித்த மணலாறு பிரதேசத்தை முற்றுமுழுதாக சிங்கள மக்கள் அபகரித்துள்ளனர்.

இந்நிலையில் தமிழர்களின் பூர்வீக குளங்களில் ஒன்றான ஆமையன்குளம் புனரமைக்கப்பட்டு கிரிஇப்வன்வெவ என்கின்ற பெயரிலே நேற்றைய தினம் முல்லைத்தீவுக்கு வருகை தந்த சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு தொடர்ச்சியாக தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பூர்வீக வயல் நிலங்கள் பூர்வீக குளங்கள் போன்றன பல்வேறு இடங்களிலும் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இவ்வாறு தமிழர்களின் பூர்வீக நிலங்கள் நாட்டினுடைய சனாதிபதி கூட்டமைப்பின் தலைவர்கள் முன்னிலையில் சிங்கள மக்களுக்கு புனரமைத்து திறந்து வைத்திருப்பது தமிழர்கள் மத்தியில் அரசின் மீதும் கூட்டமைப்பின் தலைமை மீதும் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. நிகழ்வில் சிங்கள பெண்கள் அநாகரிகமான முறையில் நடனம் ஆடியது அங்கு பங்கெடுத்திருந்த தமிழ் மக்கள் மத்தியில் சஞ்சலத்தை ஏற்படுத்தியதாக மக்கள் வேதனையுடன் தெரிவித்தார்கள்.

---

2 ஆம் பக்க தொடர்ச்சி ➔ **பலமான மாற்று அணி**

அறிக்கையில், கஜேந்திரகுமாரின் இந்த முடிவால், தமிழ் மக்களின் வாக்குகள் பிளவுபட்டு தேசியக் கட்சிகளின் ஆதிக்கம் அதிகரிப்பதற்கும், மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் காட்டிக்கொள்வதற்குமான நிலைதான் ஏற்படும் எனவும் தெரிவித்திருக்கின்றது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்

"தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, தமிழ்த் தேசியத்தின்பால் உறுதியான கொள்கைப் பிடிப்புடன் செயற்படும் ஒரு அமைப்பு என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதனால், தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் அதற்கு குறிப்பிடத்தக்க மதிப்பும், நம்பிக்கையும் இருப்பதும் உண்மை. ஆனால், பொதுவான கொள்கைகளின் அடிப்படையில் கூட்டணி ஒன்றின் மூலமாக மாற்றுத் தலைமையை அல்லது மாற்று அணி ஒன்றை உருவாக்க முற்படும் போது சில விட்டுக்கொடுப்புக்கள் அவசியம். அது தவிர்க்க முடியாததும்தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் இன்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக சர்வதேசத்தினால் பார்க்கப்படுகின்றது. ஆனால், கூட்டமைப்பின் தலைமை கடந்த 10 வருடங்களில் எதனையும் சாதிக்கவில்லை. தமிழ் மக்களின் நலன்களைவிட, ரணில் விக்கிரமசிங்கவின் நலன்களுக்குத்தான் அவர்கள் முன்னுரிமை கொடுக்கின்றார்கள் என்பதை அக்டோபர் 26 க்குப் பின்னரான நிகழ்வுகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இந்த நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பலமான மாற்றுத் தலைமை – மாற்று அணி ஒன்று அவசியம் என்பதை அனைருமே உணர்கின் றார்கள்.

வடக்கு முதலமைச்சராக கூட்டமைப்பினராலேயே கொண்டுவரப்பட்ட விக்னேஸ்வரன், மாற்றுத் தலைமைக்குரிய ஒருவராக அடையாளம் காணப்பட்டிருக்கின்றார். சர்வதேச ரீதியாகவும் இராசதந்திரிகள் மட்டத்தில் அவருக்கு ஒரு அங்கீகாரம் உள்ளது. மக்களுக்குக் கொடுத்த ஆணையை கூட்டமைப்பு முன்னெடுக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காக அதிலிருந்து வெளியேறினார். அவரது கொள்கைப் பற்றையும், அர்ப்பணிப்பையும் அதன் மூலம்வெளிப்படுத்தினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னத்தில் புதிய கூட்டணி ஒன்றை அமைத்து தேர்தல்களில் போட்டியிடுவதற்கு அவர் முன்வந்திருப்பது மிகப்பெரிய விட்டுக்கொடுப்பாகவே கருத வேண்டும். இதன் மூலம் பலமான – மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கக்கூடிய மாற்று அணி ஒன்று உருவாகும் வாய்ப்பு காணப்பட்டது. ஆனால், இதனை கஜேந்திரகுமார் நிராகரித்திருப்பது அதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்துவிட்டது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் சுரேஸ் தலைமையிலான ஈ.பி.ஆர் எல.எவ் கட்சி தமிழத் தேசியத்தை முன்நிறுத்தி தேர்தலை சந்தித்துவிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து வவுனியா நகரசபையை கைப்பற்றியதே தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஈ.பி.ஆர் எல .எவ் கட்சி மீது குற்றம் சுமத்துவதற்கான காரணமாக கூறப்படுகிறது. இந்த விடயத்தில் தமிழ் மக்களுக்கும் ஈ.பி.ஆர் எல .எவ் கட்சி மீது அதிருப்தி உண்டு என்பதை மறுப்பதற்கில்லை சாதாரணமாக ஒரு நகரசபைக்காக இந்த நிலைப்பாட்டை எடுத்ததை தவிர்த்திருக்க வேண்டும். இந்த விடயத்தில் மாற்று தலைமையின் அவசியத்தை உணர்ந்து ஈ.பி.ஆர். எல்.எப். தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் .

தமிழ் மக்கள் பேரவையில் ஈ.பி.ஆர். எல்.எப். அமைப்புடனும் இணைந்துதான் கஜேந்திரகுமார் செயற்படுகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்டு இரண்டு தேர்தல்களைச் சந்தித்தபோதும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்புடன் இணைந்துதான் கஜேந்திரகுமார் போட்டியிட்டார். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போதும் ஈ.பி.ஆர்.எல். எப். அமைப்புடன் இணைந்து போட்டியிடு வதற்கான பேச்சுக்களை கஜேந்திரகுமார் நடத்தியிருந்தார். இப்போது பலமான கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகியிருக்கும் நிலையில், அதனை கஜேந்திரகுமார் நிராகரித்திருப்பதற்கான காரணம் புரியவில்லை. கஜேந்திரகுமார் அணி பொதுத் தேர்தல் தவிர்ந்த ஏனைய தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்பதை கடந்த காலங்களில் 'கொள்கை'யாகவே கொண்டிருந்தது. ஆனால், கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் களமிறங்கியது. இப்போது மாகாண சபைத் தேர்தல்களிலும் போட்டியிடத் தயாராகியிருக்கின்றது. மாகாண சபைகளை நாம் ஏற்கவில்லை. அதனால் போட்டியிடமாட்டோம் என்ற அவர்களுடைய நிலைப்பாட்டை இப்போது மாற்றிவிட்டார்கள். அதாவது சந்தர்ப்பம் தேவைகளுக்கு ஏற்ப சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்யாமல் எதனையும் சாதிக்க முடியாது. விக்கினேஸ்வரனின் கோரிக்கையை நிராகரித்திருப்பதன் மூலம், மாற்று அணிக்கான வாய்ப்பு இல்லாமல் போகின்றது. தேசியக் கட்சிகளின்பால் மக்கள் செல்வதற்கான சூழ்நிலை உருவாகின்றது. கூட்டமைப்பின் தலைமையே தமிழ் மக்களின் தலைமையாக எதிர்காலத்திலும் கோலோச்சு வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப் படுகின்றது. இவை அனைத்தையும் உணர்ந்து கஜேந்திரகுமார் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டியது வரலாற்றுக் கடமையாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்." இவ்வாறு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

---

## தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்க கூட்டமைப்பினர் திட்டம்

### கஜேந்திரகுமார் குற்றசாட்டு



தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் வகையிலேயே புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் யாப்பு கொண்டுவரப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளமை தமிழ் மக்களுக்கு நன்மையானது எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் வகையிலேயே புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டதாகவும் அதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு துணைபோயுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

வட தமிழீழம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# சர்ச்சைக்குரிய முஸ்லிம் பிரதிநிதிகள் பதவி துறப்பு குறித்து இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய கருத்து.

## ஆதாரங்களுடன் நிரூபித்தால் அரசியலைவிட்டு ஒதுங்குவேன்

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்

கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை நான் ஒரு வருடகாலத்திற்கு வகிப்பதாக வரையறை செய்தே பொறுப்பேற்றிருந்தேன். மாகாண சபை கட்டமைப்பு காணப்படாத சூழலில் எண்பது சதவீதம் தமிழ் மொழிபேசுகின்ற மக்கள் தமது பிரச்சினைகளை தமது சொந்தமொழியிலே வெளிப்படுத்த வேண்டும்.



அதற்கு அந்த மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொண்ட ஒருவராலேயே தீர்வினை வழங்க முடியும் என்ற அடிப்படையிலும் நிருவாக முடக்கத்தினை உடைத்து கிழக்கில் புதிய யுகத்தினை உருவாக்குவதற்காக செயற்பட ஆரம்பித்தேன்.

மிலேச்சத்தனமான தாக்குதல்களின் பின்னர் நான் உள்ளிட்ட மூவரை இராஜினாமாச் செய்யுமாறு கூறி உண்ணாவிரதப்போராட்டங்களை அத்துரலிய தேரர் ஆரம்பித்தார். ஞானசாரதேரர் மூலம் எமது சமூகத்திற்கு தீங்கிழைப்பதற்கான நடவடிக்கைகளும் ஏற்பாடாகியிருந்தன. இதனை மையமாக வைத்தே நான் பதவி விலகும் தீர்மானத்தினை எடுத்திருந்தேன்.

அத்துடன் என்மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடன் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சனாதிபதியிடத்தில் நேரடியாகவே கூறியுள்ளேன். தொடாந்தும் சுதந்திரக்கட்சி உறுப்பினராக செயற்படுவேன் என்பதில் எவ்விதமான மாற்றுக்கருத்துக்களும் இல்லை. குற்றங்கள் இழைக்காது அச்சம் கொள்ள வேண்டியதில்லை. நான் அரச சார்பற்ற பல்கலைக்கழகமொன்றை தொழில்நுட்ப பயிற்சி திட்டங்களை உள்ளடக்கியதாகவே நிர்மாணம் செய்துவருகின்றேன். இதற்கு ஷரீயா பல்கலைக்கழகம் என்று கூறி எதிர்ப்புக்களை வெளிப்படுத்துகின்றார்கள்.

இதேவேளை, சவுதி அரேபியாவிலிருந்து கிழக்கு மாகாணத்தில் முதலீடுகளைச் செய்வதற்காக வருகை தந்தவர்களையே நான் உத்தியோகபூர்வமாகச் சென்று சந்தித்திருந்தேன்.

என்னுடன் பாதுகாப்பு அதிகாரிகள், உள்ளிட்ட அனைவரும் இருந்தார்கள். நான் அந்நாட்டினைச் சேர்ந்த மூவருடனும் கலந்துரையாடினேன். நாட்டில் பதற்றமான சூழல் இருப்பதால் பிறிதொரு தருணத்தில் சந்திப்பதாக கூறி விடைபெற்றிருந்தேன் மறுநாளே அவர்கள் வெளியேறிவிட்டார்கள். ஆகவே இதில் திரைமறைவில் எதுவுமே நடைபெற்றிருக்கவில்லை.

மேலும் கோவிலை இடித்து பள்ளிவாசல் கட்டியுள்ளேன் என்று கூறுகின்றார்கள். நான் இஸ்லாத்தினை பின்பற்றும் ஒருவன். இஸ்லாத்தில் இன்னொரு மதத்தினை அழிக்குமாறு கூறப்பட்டிருக்கவே இல்லை.

நான் அவ்வாறு செயற்பட்டுள்ளேன் என்று குற்றச்சாட்டுக்களை சுமத்தும் எந்தவொரு தமிழ்த் தலைமையாவது சான்றாதாரங்களை வெளிப்படுத்துமாகவிருந்தால் அதனை உறுதி செய்யுமாகவிருந்தால் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவே தயாராக உள்ளேன்.

இதனை அவர்களுக்கு சவாலாக விடுகின்றேன் என்றார்.

## விசாரணைகளுக்கு முகங்கொடுக்க தயார்

அசாத்சாலி



தாக்குதல்கள் நடைபெற்று மூன்று வாரத்திற்கும் அதிகமான நாட்கள் நாடு அமைதியாகவே இருந்தது. விசாரணைகள், கைதுகள் என தீவிரவாதத்தினை ஒழிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் சரியாகவே முன்னெடுத்து வந்தது.

ஆனால் நாட்டைக் குழப்பி ஆட்சியை, வாக்குகளை சம்பாதிக்க முயன்ற சக்திகள் அனைத்தையும் மாற்றி இனவாதத்தினை தூண்டிவிட்டன. அதன் எதிரொலிகளாகவே அண்மைய நாட்களில் நடைபெற்ற சம்பவங்கள் அமைந்திருக்கின்றன.

எனக்கு சனாதிபதியே ஆளுநர் பதவியை வழங்கினார். ஆனால் நாட்டில் எனது இனத்தவர்கள் நெருக்கடிக்குள் இருக்கின்றபோது அந்தப்பதவியை பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. அதனால் நான் விலகத் தீர்மானித்தேன்.

அதுமட்டுமன்றி என்மீது குற்றச்சாட்டுக்கள்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம் →

## 22 இலட்சம் முஸ்லிம்களின் பாதுகாப்பே மிக முக்கியம் - ரிஷாத் பதிர்யுதீன்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடைபெற்று 21 நாட்களின் பின்னரே மினுவாங்கொடையிலும், நிகெரவெட்டிய, குளியாப்பிட்டி, குருநாகல், சிலாபம், புத்தளம் என முஸ்லிம்கள் செறிந்த வாழும் இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் ஒருவராவது கைது செய்யப்பட்டுள்ளாரா? முஸ்லிம்களின் பல மில்லியன் கணக்கான சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டு வியாபார நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து எவராவது கருத்தக்களை முன்வைக்கின்றார்களா? ரம்ழான் பண்டிகை, நோன்பு காலங்களில் தீவிரவாதத்துடன் எந்தத்தொடர்பும் இல்லாத அப்பாவி முஸ்லிம்கள் பாலின, வயது வேறுபாடுகளின்றி கைது செய்யப்படுகின்றார்கள். சிறைகளில் அடைக்கப்படுகின்றார்கள். இலங்கை வாழ் இஸ்லாமியர்கள் தீவிரவாதத்தினை முழுமையாக எதிர்க்கின்றார்கள். உலகத்தீவிரவாதம் இலங்கைக்குள் புகுந்து விட்ட நிலையில் அதனை துடைத்தெறிவதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றார்கள்.



ஆனால் ஆட்சி வெறிபிடித்த இனவாதக் குழுக்கள் முஸ்லிம்களை பழிதீர்ப்பதன் மூலம் மீண்டும் ஆட்சியைப்பிடிப்பதற்காக பல்வேறு முயற்சிகளை எடுக்கின்றன. தற்கொலை தாக்குதல் சம்பவங்களை நாம் மிக வன்மையாக கண்டிக்கின்றோம். உயிர் துறந்தவர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிக்கின்றோம்.

அப்படியிருக்கையில் தீவிரவாதத்துடன் எந்தவிதமான தொடர்பும் இல்லாத அப்பாவிகள் மீது எதற்காக குற்றச்சாட்க்களை சுமத்துகின்றீர்கள். அந்த மக்களின் பிரதிநிதிகளாக எம்மீது எதற்கான வீண்பழிகளை சுமத்துகின்றீர்கள்.

22 இலட்சம் முஸ்லிம்களின் பாதுகாப்பினை கருதி, மீண்டும் இந்த நாட்டில் கறுப்பு சூலை உருவாகிவிடக்கூடாது என்பதற்காகவே நாம் பதவிகளை துறந்துள்ளோம். எம்மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குகின்றோம் என்றும் கூறியுள்ளோம்.

அப்படியிருக்கையில் எதற்காக எம்மை நோக்கியே குற்றங்களை சுமத்தி இனரீதியாக நசுக்குவதற்கு முயற்சிகின்றீர்கள். நாம் தீவிரவாதத்திற்கு, பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள்.

வடக்கில் பயங்கரவாதம் தலைதூக்கியபோது நாம் துணைபோயிருக்கவில்லை. இதனாலேயே அங்கிருந்து நாம் விரட்டப்பட்டோம். தற்போதும் நாம் தீவிரவாதத்தினை ஆதரிக்கப்போவதில்லை. 54 இஸ்லாமிய நாடுகளின் அமைதியை சீர்குலைப்பதற்கு ஏகாதிபத்திய நாடுகளின் பின்னணியுடன் நகரும் தீவிரவாதத்தின் இலங்கையில் உள் நுழைவதற்கு அனுமதிக்கப்போவதில்லை. இலங்கை முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் நாம் அதனைச் செய்வோம். ஆனால் நாட்டுப்பற்றாளர்கள் என்று அடிப்படைவாதத்தினை கையிலெடுத்து இனவாதத்தினை பற்றி எரிய வைப்பதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை. இதனை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

# எமக்கு தேவையானதை மத்தியில் உள்ளவர்கள் தீர்மானிக்க முடியாது.

## தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி. விக்னேஸ்வரன்



சனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுவது போல் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் போதுமானவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வாராந்த கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

***கேள்வி :- 13வது அரசியல் திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரப் பகிர்வு வடக்குக்குப்போதும் என்று எமது நாட்டின் சனாதிபதி இந்திய ஊடகவியலாளர்களிடம் அண்மையில் கூறியுள்ளார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?***

பதில்: "அதைத் தீர்மானிப்பது அவர் அல்ல. எமது மக்களே! அவரைப் பதவிக்குக் கொண்டுவர நாங்கள் 2014இல் 2015இல் பாடுபட்டது அவர் எங்களுடன் சேர்ந்து பேசி எமது அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தருவார் என்று தான். எம்முடன் பேசித்தான் இந்த முடிவை எடுத்தாரா அல்லது அடிவருடிகளின் பேச்சைக் கேட்டு இவ்வாறு கூறியுள்ளாரா?

13வது திருத்தச் சட்டம் 1987ல் வரும் போதே இரு நாட்டாரும் இணங்கிக் கொண்ட பல விடயங்களை அப்போதைய இலங்கை அரசாங்கம் முக்கியமாக சனாதிபதி ஜயவர்தன எமது நாட்டிற்குள் வர விடவில்லை. அப்போதைய சனாதிபதி ஜயவர்தனாவைத் தெரிந்த எனது நண்பர் ஒருவர் "நரியின் மறுபிறப்பு" என்று அவரை வர்ணிப்பார். "20ம் நூற்றாண்டின் நரி" (20th Century Fox) என்று வெளிப்படையாகவே அக்காலத்தில் அவர் அழைக்கப்பட்டார்.

கிட்டத்தட்ட இந்தியாவின் மாகாண அரசுகளின் அதிகாரங்கள் இலங்கையின் வடகிழக்கு மாகாண சபைக்கு வழங்க வேண்டும் என்றே அப்போதைய கருத்துப்பரிமாற்றத்தின் போது முடிவு எடுக்கப்பட்டது.அது நடக்கவில்லை. அதனால்தான் 28.10.87ம் திகதியன்று தமிழ்த்தலைவர்கள் திருவாளர்கள் அமர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தன் ஆகியோர் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு "எமக்குத் தருவதாகக் கூறிய அதிகாரங்கள் தரப்படவில்லை" என்ற பாணியில் ஒருமித்து கடிதமொன்றை எழுதி இருந்தார்கள்.

ராஜீவால் கிழவருடன் போட்டி போட முடியவில்லை. "இப்போது கிடைப்பதை எடுப்போம் பின்னர் பார்ப்போம்" என்று இருந்து விட்டார் ராஜீவ்காந்தி அவர்கள். ஆகவே சனாதிபதி சிறிசேன கூறுவது போல் அதிகாரங்கள் போதுமானவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை. 13வது திருத்தச்சட்டத்தை ஒன்பது மாகாணங்களுக்கும் ஏற்புடைத்தாக்கியமையால் எமக்கெனக் கிடைக்கவிருந்த அதிகாரப் பகிர்வு கடைத்தெருவுக்கு இழுத்து வரப்பட்டு "அடுத்தமாகாணம் அதைக் கேட்க வில்லை, நீயேன் கேட்கிறாய்?" போன்ற கேள்விகளால் எம்மவரின் குரல்கள் அடக்கப்பட்டன.

பேராசிரியர் பீரிஸ் அவர்கள் (அவர் மீது எங்களுக்கு மரியாதை இருந்த காலத்தில்) கூறினார் -"ஒரு கையால் தந்து மறுகையால் திரும்ப வாங்கும் சட்டமே 13வது திருத்தச்சட்டம்" என்று.

முன்னைய கிழக்கு மாகாண முதலமைச்சர் ஒருவர் கூறினார் "இந்தச் சட்டத்தின் கீழ் மலசலகூடம் கழுவுபவரைக் கூட நியமிக்க எனக்கு உரித்தில்லை" என்று. இவற்றிற்கு மேலதிகமாக வேறு சில முக்கியமான விடயங்களை சனாதிபதி மறந்து விட்டார் போல் தெரிகின்றது.

சில வருடங்களுக்கு முன் அனுராதபுரத்தில் என்னையும் உள்ளடக்கிய ஒன்பது முதலமைச்சர்களும் அவரைச் சந்தித்தபோது மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் குறைபாடுகள் பற்றி விலாவாரியாக அவருக்கு எமது முதலமைச்சர்கள் அனைவராலும் தெரிவிக்கப்பட்டது. அவரது ஆதரவாளர் ஆகிய கௌரவ பேஷல ஜயரட்ன (அப்போதைய வடமத்திய மாகாண முதலமைச்சர்) "ஒரு மாகாணத்தை ஆளும் சகல அதிகாரங்களும் எமக்கு வழங்கப்பட வேண்டும். இதுவரையில் அவ்வாறு வழங்கப்படவில்லை. மத்தியின் உள்ளீடலே அதிகம். ஆனால் சமஷ்டி வேண்டாம்" என்றார்.

அதுபற்றிப் பார்ப்பதாகக் கூறினார் சனாதிபதி. குடிகாரன் பேச்சுப் போல் அது மறக்கப்பட்டுவிட்டது. பேஷலவுக்கு நான் பின்னர் கூறினேன் "சமஷ்டி இல்லாமல் உங்களுக்குத் தரப்படும் மாகாண உரித்துக்களை எவ்வாறு நிரந்தரமாக்கப் போகின்றீர்கள்? தரப்படுவனவற்றை ஒற்றையாட்சியின் கீழ் திரும்பப் பெறலாமே?" என்றேன். அதற்கு அவர் "அதுபற்றி எனக்குத் தெரியாது. சமஷ்டி வேண்டாம். முழு அதிகாரப் பகிர்வும் வேண்டும்" என்றார். "சமஷ்டி என்ற சொல்லை உங்கள் தலைவர்கள் தகாத வார்த்தை ஆக்கி விட்டார்கள்" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்று விட்டேன்.

13வது திருத்தச் சட்டத்தால் 1987ல் தந்தவற்றைப் பற்றி சனாதிபதி கூறுகிறார். அங்கு தரப்பட்ட எத்தனை அதிகாரங்கள் தற்போது இல்லை என்பது பற்றித் தெரியாமல் தான் அவ்வாறு கூறுகின்றாரா அல்லது தெரிந்தும் தமிழ் மக்களை வாங்க முடியும் என்ற எண்ணத்தில் இவ்வாறு கூறியுள்ளாரா?

உதாரணத்திற்கு வடகிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அவர் இன்றும் ஏற்கின்றாரா? அப்படியென்றால் எங்களிடம் கேட்காமல் திருகோணமலை துறைமுகத்தில் சிங்கள மக்களைப் பெருவாரியக இறக்க எத்தனிப்பது ஏன்?

மேலும் குறித்த சட்டம் மூலம் வடகிழக்கு இணைப்பு கிடைத்தது. சுமார் 18 வருடங்கள் அது எமது அரசியல் யாப்பில் இடம்பெற்றதன் பின்னர், (தன் ஒப்புதல்ப்படி) கட்சி அரசியல் ரீதியாக சிந்திக்கும் ஒரு பிரதம நீதியரசராலும் அவர் சொல் கேட்கும் நீதியரசர்களாலும் அந்த இணைப்பு துண்டிக்கப்பட்டது. சரியான முறையில் குறித்த இணைப்பை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? இல்லை. மாறாக அவசர அவசரமாக வடமாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்குமிடையில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி வந்தார்கள் அரசாங்கத்தினர்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம் →

5 ஆம் பக்க தொடர்ச்சி →

### விசாரணைகளுக்கு

சுமத்தப்படுகின்றன. நான் ஆளுநர் பதவியில் இருந்தாலோ இல்லாவிட்டாலோ என்மீது குற்றச்சாட்டுக்கள் காணப்படுமாயின், அதற்குரிய சான்றுகளுடன் காவல்துறை திணைக்களத்தில் முறைபாடுகளைச் செய்ய முடியும்.

அவர்களால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு முகங்கொடுப்பதற்கு நான் என்றுமே பின்னிற்கப்போவதில்லை. அதற்கான அவசியமும் இல்லை. ஏனென்றால் நான் எவ்விதமான தவறுகளையும் இழைக்கவில்லை.

மேல்மாகாண ஆளுநராக பதவியேற்ற காலம் முதல் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து சரியான வழியில் தான் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்திருந்தேன். இதனால் அரசியல் ரீதியாக அச்சமடைந்தவர்களே ஆளுநர் பதவிகளை பறிக்க வேண்டும். ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்று கங்கணம் கட்டினார்கள்.

இதுதான் அண்மைய நாட்களில் நடைபெற்று வருகின்ற விடயங்களின் பின்னணியாக இருகின்றது. உண்ணாவிரதம் இருப்பவர்கள், பேரணி செல்பவர்கள், எனக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை அடுக்குபவர்கள் இதுவரையில் ஏன் காவல்துறை தலைமையகத்திற்கோ அல்லது காவல் நிலையத்திற்கோ சென்று எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை.

குருநாகல் வைத்தியரை நான் பாதுகாப்பதாக கூறுகின்றார்கள். கருத்தடை சத்திரசிகிச்சை செய்ததாக குற்றச்சாட்டுக்களை அடுக்கிச் செல்கின்றார்கள். ஆனால் அந்த வைத்தியர் சொத்து சேர்த்த விடயத்திற்காகத் தான் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது அவர்மீதான ஏனைய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யுமாறு நாமே சுகாதார அமைச்சருக்கு கூறி குழுவை நியமித்து அறிக்கையை தயார் செய்து வருகின்றோம். ஆகவே யார் யார் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்த முடியும். ஆனால் அவை நிரூபிக்கப்பட வேண்டும். இனவாதத்தின் அடிப்படையில் அரசியல் இலாபத்திற்காக அவை அமையக்கூடாது என்றார்.

6 ஆம் பக்க தொடர்ச்சி

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற கிராமங்களைச் சுற்றிய பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம் இந்த நிமிடத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. அதாவது இரு மாகாணங்களுக்கும் இடையில் சிங்களக் குடியேற்றங்களை இருத்தி விட்டு மத்தியில் சிங்களவர்கள் வாழ்கின்றார்களே வடக்கையும் கிழக்கையும் எவ்வாறு இணைப்பது என்று கேட்பதற்காக அவசர அவசரமாக சனாதிபதியின் ஆளுமைக்கு உட்பட்ட மகாவலி அதிகார சபையினதும், இராணுவத்தினரதும், வெலவெலத்துப் பயந்து போயிருக்கும் மாகாணத் தமிழ் அலுவலரதும் அனுசரணையின் பேரில் இது நடைபெற்று வருகின்றது.

தக்க கருத்து வெளியிட்டால் கரும்வேலக் காட்டிற்கு மாற்றி விடுவார்கள் என்ற பயம் இந்தத் தமிழ் அலுவலர்களுக்கு என்றும் இருந்து வருகின்றது போலும்!

அடுத்து 1992ல் அரச அதிபர், மாவட்டச் செயலர், கிராம சேவையாளர் போன்றவர்களின் மேல் இருந்த மாகாணங்களின் அதிகாரம் நீக்கப்பட்டது. அவர்கள் இப்பொழுது மத்தியின் அதிகாரத்தின் கீழ் வருகின்றார்கள். ஆகவே சமாந்திரமான இரண்டு அதிகார மையங்கள் மாகாண மட்டத்தில் ஆட்சி யோட்சுவது அவருக்குத் தெரியாதா? மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் அற்ற அரசியல்வாதிகளைக் கொண்டு வந்து இணைத்தலைவர்கள் ஆக்கியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் என்பது மாகாண ரீதியாக முதலமைச்சரிடத்திலும் மத்தியின் சார்பாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் வசமே இருக்கின்றது. சட்டவாக்க உரிமை கொண்டவர்கள் சபையில் இருந்து பேச மட்டுமே முடியும். இணைத்தலைவர்கள் ஆக முடியாது அவர்களால்.

ஆனால் ஆக்கியுள்ளார் எமது கனம் பொருந்திய ஜனாதிபதி. பிரதம செயலாளர் மாகாணப் பொதுச் சேவை அலுவலர் சேவைக்குள் அடங்காது மத்தியின் கீழ் வருவது அவருக்குத் தெரியாதா?

எனக்குத் தேவையான ஒரு செயலாளரை எனது அமைச்சுக்கு நான் தேர்ந்தெடுக்க ஒரு வருடத்திற்கு மேலாகப் போராட வேண்டியிருந்தது. மத்திக்கும் மாகாண மட்ட அலுவலர்களுக்கும் இடையில் இருக்கும் நெருங்கிய உறவே இதற்குக் காரணம்.

மத்திக்கிருக்கும் அதிகாரத்தில் மதி மயங்கியவர்களே எமது மாகாண மட்ட அதிகாரிகள். அவ்வளவுக்கும் நான் கோரிய அலுவலர் முழு இலங்கை மட்டத்தில் நிர்வாக சேவைப் பரீட்சையில் 1984ல் சித்தி அடைந்த ஒருவர்.

வடமாகாணத்தில் இன்று இருக்கும் அத்தனை சிரேஷ்ட அலுவலர்களும் போதுமான அறிவிப்பு பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்காது 1991ல் அல்லது 1992ல் போரின் போது வைக்கப்பட்ட பரீட்சையில் மாகாண மட்டத்தில் சித்தி அடைந்து வந்தவர்களே. மாகாணமட்டத்தில் இருக்கும் மத்தியின் அதிகாரங்களையும் செல்வாக்கையும் புரிய வைக்கவே இதைக் கூறுகின்றேன். பெருமளவில் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளித்திருக்கின்றோம் என்று கூறும்போது ஜனாதிபதி தனது நாக்கைக் கொடுப்புக்குள் மடித்து வைத்துக்கொண்டு கூறியிருக்க வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் சாதாரண மக்களின் கோரிக்கை சிறந்த பொருளாதார நிலைமையே அன்றி அரச அதிகாரங்கள் அல்ல என்ற கருத்துப்பட ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை விட்டுள்ளது.

போரின் பின்னரான நிலையில் எமது மக்கள் அன்றாட தேவைகளுக்குத் திண்டாட வேண்டியுள்ளது என்பது உண்மை. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம் போதிய முதலீடுகள் வராமை மறுபுறம் செய்வதாகக் கூறப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் தாமதம் கடன் நிறுவனங்களின் கசப்பான காரியங்கள், இராணுவத்தினரின் உள்ளீடுகள் என்று பலதாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் அல்லது பாதிக்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

"தரவேண்டியதைத் தராது வைத்து தாமதித்துத் தந்தால் தரங்கெட்ட மக்கள் மறந்து விடுவார்கள் தமது உரிமைகளை" என்ற எண்ணத்தில் சனாதிபதி இவ்வாறு கூறினாரோ தெரியவில்லை.

எமது மக்களுக்கு வேண்டியிருந்தது பொருளாதார அபிவிருத்தியே அன்றி அரசியல் ரீதியான அதிகாரங்கள்அன்று என்று சனாதிபதி கூறும்போது 2013 செப்ரெம்பரில் வடமாகாண முதலமைச்சராகப் போட்டி இட்டவருக்கு எவ்வாறு 133,000க்கு மேற்பட்ட மக்கள் வாக்குகள் கிடைத்தன என்று சிந்திக்க வேண்டும்.

அப்போது சனாதிபதி அக்காலத்தைய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்தவர். சனாதிபதி மகிந்த எவ்வாறான பொருளாதார குறையகற்றும் ஈகையில் ஈடுபட்டிருந்தார் என்று அவருக்குந் தெரிந்திருந்தது. இராணுவத்தினர் ஊடாக அள்ளி அள்ளிக் கொடுத்தாரே மகிந்த!

ஏன் மக்கள் அவரின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கவில்லை? மக்களுக்குத் தேவைகள் இருப்பது உண்மை தான். ஆனால் எமது தமிழ் மக்களை விலை கொடுத்து வாங்கிவிட்டு அதிகாரங்களைப் பகிராமல் இருக்க முடியும் என்று சனாதிபதி நினைத்தால் அவரின் அரசியல் அறிவு பற்றி சந்தேகம் எழுவது இயல்பே. இப்பொழுதும் நான் என் மக்களுக்குக் கூறுவது அரசாங்கம் தரும் கொடைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள். பொருளாதார சலுகைகளை தாராளமாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் தேர்தல் என்று வந்தால் உங்கள் உரிமைகளுக்காகப் போராட முன்னிற்பவர்களுக்கே வாக்கு அளியுங்கள் என்று.

அப்போது அவர்கள் "எங்கள் வாக்கைப் பண்டமாற்றாகக்கோரியே கொடைகள் தரப்பட்டன. வாக்களிக்காவிடில் அது துரோகம் அல்லவா?" என்று கேட்பார்கள். அதற்கு நான் கூறுவது "அரசாங்கமும் அரசாங்கத்துடன் இணைந்த தமிழ் மக்களும் போரின் போது உங்களுக்கு ஏற்படுத்திய அழிவுகளுக்கும், அல்லல்களுக்கும், அவலங்களுக்கும் கோடி கோடியாக நட்ட ஈடு உங்களுக்குத் தர வேண்டும்.

தமிழ் மக்களின் நேர்மையான, நியாயமான அரசியல் கோரிக்கைகளை உதாசீனம் செய்தே உங்கள் அனைவரையும் இவ்வாறான இக்கட்டான நிலைக்குத் தள்ளினார்கள். இப்போது வாக்குக் கேட்டு கொடைகள் தருவது எவ்வாறு நியாயமாகும்? எவ்வாறு அறமாகும்? பிள்ளையையுங் கிள்ளித்தொட்டிலையும் ஆட்டப் பார்க்கின்றார்கள் அல்லவா? உங்களுக்குரிய நட்ட ஈட்டைகூடுமானவரை வருத்தி அரசாங்கத்திடம் இருந்தும் அரச அடிவருடிகளிடம் இருந்தும் இவ்வாறான கொடைகள் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

அவர்கள் உங்கள் கடனையே திருப்பி அடைக்கின்றார்கள். உங்களுக்கென்று எதையும் புதிதாகச் செய்ய முன்வரவில்லை. உங்களை நீங்களே ஆள சட்டத்தில் இடமளிக்கவில்லை.

உங்களுக்குத் தேவையான அரசியல், பொருளாதார, கல்வி, சமூக புனரமைப்புக்களை உங்களைக் கேட்டு சட்டப்படி நகர்த்த முன்வரவில்லை.

அவர்கள் தருவதை அவர்களிடம் இருந்து எடுத்து விட்டு தமிழர்தம் உரிமைகளுக்காகப் போராடும் தகுந்தவர்களுக்கு வாக்களிப்பது பிழையல்ல" என்று கூறுவேன். ஆனால் அண்மைக் காலங்களில் தகுந்தவர்கள் என்று நாம் நம்பியவர்கள் கூட தரங்கெட்டவர்களாக மாறி வருவது தமிழர்தம் தலைவிதி. அதை விரைவில் மாற்றி அமைப்போம்.

இவ்வாறான பொருளாதார நிலைமை சீர்திருத்தத்தை எம் மக்கள் தமக்கெனத்தாமே தீர்மானித்து செய்ய வேண்டுமே ஒளிய மத்தியில் உள்ளோர் "இவர்களுக்குத் தேவை இதுதான்" என்று தாமே முடிவெடுத்து செய்வதற்கு நாம் ஒன்றும் அவர்தம் இனத்தையோ, மதத்தையோ, மாகாணத்தையோ சார்ந்தவர்கள் அல்ல.

நாம் தமிழர்கள். நாம் கிறீஸ்தவர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள். எமக்கென ஒரு பாரம்பரியம் உண்டு. தாயகம் உண்டு, தனித்துவம் உண்டு.அவற்றை மதித்து, மறுதலிக்காமல், மயக்க வார்த்தைகளைப் பாவிக்காமல் உரிய உரித்துக்கள் மூலம் தந்தாலன்றி மக்கள் மீண்டும் மீண்டும் தருவதை எடுத்துக் கொண்டு தம்மைத் தாங்கிப் பிடிக்கக் கூடிய தமிழ் பிரதிநிதிகளுக்கே வாக்களிப்பர் எங்கள் மக்கள்.

இதனால் நான் என் நண்பர்கள் டக்ளஸ் தேவானந்தா, தம்பி அங்கஜன், திருமதி மகேஸ்வரன் போன்றவர்களைக் குறை கூறவரவில்லை. அவர்களால் போகக் கூடிய மட்டம் பொருளாதார அபிவிருத்தி பெறுவது வரைக்கும் மட்டுமே என்று கூற வருகின்றேன். அவற்றை எடுத்துக் கொடுங்கள் எம் மக்களுக்கு என்று தான் நான் அவர்களுக்குக் கூறுவேன். ஆனால் எமது மக்கள் தமது நிரந்தர தேவையை உணர்ந்துள்ளார்கள். அதுதான் முற்றுமுழுதான வடகிழக்கு இணைந்த சகல மட்ட அதிகாரப்பரவல்! 13வது திருத்தச் சட்டமல்ல."

## ஈழத்தைச் சேர்ந்த தமிழ் பாடகி மாயா மகாராணியின் பிறந்த நாளில் பாடி கௌரவிக்கிறார்!



ஈழத்தை பிறப்பிடமாகக் கொண்ட மாயா அருள்பிரகாசத்தை சுருக்கமாக மாயா (MIA) என்று அழைப்பார்கள். பிரித்தானியாவில் மட்டுமல்லாது, இவர் அமெரிக்காவிலும் பிரபலமான பொப் இசைப் பாடகியாக வலம் வருகிறார். இந்நிலையில், பிரித்தானிய மகாராணி எலிசபெத் அவர்களின் 93வது பிறந்த தினம், நேற்றைய தினம்(சனிக்கிழமை) மிக கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் மாயாவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய மகாராணியாரின் இந்த அழைப்பு மிக மிக பெருமை மிக்க விடயம் ஒன்றாகும். அதுவும் ஒரு சாதனை படைத்த ஈழத்து தமிழ் பெண்ணுக்கு இவ்வாறு அழைப்பு வருவது, தமிழர்களை பெருமை கொள்ள வைக்கிறது. மாயாவின் தந்தை ஈரோஸ் அமைப்பில் இருந்து பின்னர் விடுதலைப் புலிகளோடு அவ்வமைப்பு இணைந்த வேளை அவர்களோடு நின்று பணியாற்றியவர் என்பதும், ஈழத் தமிழர்களுக்கு தனி ஈழமே ஒரு தீர்வை பெற்றுத்தரும் என்பதிலும் அவர் இன்றுவரை உறுதியாக இருக்கிறார். பல சர்வதேச தொலைக்காட்சிகளில் தோன்றி பேட்டி வழங்கியுள்ள மாயா, இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்று நேரடியாக நிகழ்ச்சியில் கூறி, பல சர்ச்சைகளில் சிக்கியும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




**கணிதன்**

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் இன்றைய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவையும் யாழ்ப்பாணத்தில் மாவட்ட மந்திரிசபையில் பங்கேற்பது குறித்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் “எமக்கு பாலங்களும் வீதிகளும் அவசிய மில்லை.

எம்மை நாமே ஆள்வதற்கான உரிமையே வேண்டும்” என்று முழங்கினர்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் நடைபெற்ற அனைத்து தேர்தல் பிரச்சார மேடைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் “எமக்கு அபிவிருத்தி முக்கியமல்ல.

நாம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். எமக்கு உள்ள சுயநிர்ணய உரிமை உரித்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். எமது பிரதேசத்தின் அபிவிருத்திகளை நான் எனக்கு உள்ள வெளித்தொடர்புகளைப் பயன்படுத்தி நிதியைப் பெற்று மேற்கொள்வேன். ஆனால் நாம் எமது ஒற்றுமையை வெளிப்படுத்தி எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். சர்வதேச சமூகம் எம்மை கூர்ந்து அவதானிக்கிறது. கடந்த அரசாங்கம் எமக்குச் செய்த கொடுமைகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவேண்டும். சர்வதேச சமூகத்தின் அந்த தார்மீக கடமையை வலியுறுத்துவதற்கு நாம் ஒற்றுமையுடன் இருக்கிறோம் என்ற செய்தியை நீங்கள் உலகத்திற்குச் சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் அந்தக் கருமத்தை நிறைவேற்ற முடியும். அதற்கான ஆணையை வழங்கும்படிதான் நான் உங்களிடம் வினயமாகக் கேட்கிறேன். அபிவிருத்தியை நாம் எப்பொழுது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம்” என்று தொடர்ந்து கூறிவந்தார்.

தமிழரசுக் கட்சியின் ஆரம்ப நாட்களிலும் சரி அது தமிழர் ஐக்கிய முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணி பின்னர் மீண்டும் தமிழரசுக் கட்சி என்று பல பரிணாமங்களை அடைந்தபோதும் சரி அது ஒருபோதும் அபிவிருத்தி அரசியலை மேற்கொள்ளப்போவதாகக் கூறவில்லை. ஆனால் இன்று தனது கையாலாகாத்தனத்தையும் தன்னுடைய அரசியல் வங்குரோத்துத் தனத்தையும் மூடிமறைப்பதற்காக இணக்க அரசியல் அபிவிருத்தி அரசியல் என்ற போர்வைகளைப் போர்த்திக்கொண்டு மக்கள் முன் உலாவர முயற்சிக்கின்றது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் முதல் மூன்றாண்டுகள் அதாவது 2012ஆம் ஆண்டுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்தராஜபக்சவிற்கு எதிரான நிலைப்பாட்டில் தீவிரமாக இருப்பதுபோல் நடித்தது. அந்த நாடகம் திருவாளர் சுமந்திரன் மகிந்தவுடன் கிரிக்கெட் விளையாடியதுடன் அம்பலமானது. இலங்கையின் தேசியக் கொடி இலங்கையர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இல்லை என்று கூறி தந்தை செல்வாவே ஏற்க மறுத்த அந்தக் கொடியை 2012ஆம் ஆண்டின் மேதினத்தில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்கவிடமிருந்து பெற்றுக்கொண்டதன் மூலம் ரணிலின் மூலமாக தென்னிலங்கை அரசியல் சமூகத்துடன் ஒரு இணக்க அரசியலுக்குச் செல்வதற்கு தயாராகிவிட்டதையும் தமிழ்த் தேசிய இனத்தை தனது சுயலாபங்களுக்காகக் காட்டிக்கொடுக்கத் துணிந்துவிட்டார் என்பதையும் கோடிட்டுக் காட்டியது.

ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்காக 2014ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் எதுவித நிபந்தனையும் விதிக்காமல் உழைத்து 2015ஆம் ஆண்டு தொடக்கத்தில் மைத்திரியை சனாதிபதியாக்கி ரணிலை பிரதமராக்கி அழகு பார்த்தார் திருவாளர் சம்பந்தன். தமிழர்களை அரசியல் அநாதைகளாக நடுத்தெருவில் விடுவதற்கும் மீண்டும் மீண்டும் அவர்களின் அறியாமையைப் பயன்படுத்திக்கொள்வதற்குமாக சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழுமத்திற்கு அவ்வப்போது அரசாங்கத்தால் சன்மானம் வழங்கப்பட்டு அவர்களின் வாக்கு வங்கியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

வாங்கியதற்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காகவோ அல்லது சன்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவோ தமிழரசுக் கட்சியும் நிபந்தனை அற்ற ஆதரவினை அரசாங்கத்திற்கு அதன் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வழங்கி வருகின்றது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து தொடர்ந்து நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் வெற்றியடைவதற்கு உறுதிபூண்டு செயற்பட்டிருந்தது.

எதிர்க்கட்சியில் இருப்பதால் எதிர்ப்பதுபோல் நாடாளுமன்றத்தில் காரசாரமான விவாதங்களை முன்னெடுத்து இறுதியில் அவற்றை ஆதரித்து வாக்களித்து அரசாங்கத்திற்கும் மக்கள் விரோத வரவு-செலவுத் திட்டத்திற்கும் தமது ஆதரவினை வழங்கி தமிழ் மக்களின் ஆணையைப் புறந்தள்ளியது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு உப்புச்சப்பற்ற காரணங்களைக் கூறி வரவு-செலவுத் திட்டம் நிறைவேற தனது பரிபூரண ஆதரவினை வழங்கியிருந்தது.

ஒருபுறம் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று கோசமிட்டுக்கொண்டு மறுபுறம் அந்த இராணுவம் வடக்கில் நிலைகொள்வதற்கு இடமளிக்கும் வகையில் பாதுகாப்புச் செலவினங்களுக்குக் கூடுதல் நிதியொதுக்கீடு செய்யப்பட்டமைக்கு ஆதரவையும் வழங்கி வந்துள்ளது. யுத்தம் இல்லாத ஒரு சூழலில் தனது எதிர்க்கட்சி தலைவர் பதவியைப் பயன்படுத்தி பாதுகாப்பிற்கான நிதியொதுக்கீட்டை குறைப்பதற்குக்கூட அழுத்தம் கொடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவில்லை என்பது கடும் கண்டனத்திற்குரியது.

அரசியல் தீர்வு வரப்போகிறது. அதற்கு இந்த அரசாங்கம் நீடிக்க வேண்டும். அரசாங்கம் கொண்டு வருகின்ற பிரேரணைகள் அனைத்தும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றியடைய வேண்டும். அப்பொழுதுதான் எமது பிரச்சினைக்குத் தீர்வைக்கொண்டுவரும் புதிய அரசியல் யாப்பும் வெற்றி பெறும் என்று குழந்தைத் தனமான காரணத்தைச் சொல்லியிருந்தார்.

அதற்காகவே அரசாங்கத்திற்கு நிபந்தனை அற்ற ஆதரவினையும் வழங்கியிருந்தார்.

ஆனால் இன்று நாளாந்த பிரச்சினை முதல் அரசியல் தீர்வு வரை எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காத நிலைமையிலேயே தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.



2016ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கையில் புதிய அரசாங்கம் அதற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்று காரணம் கூறப்பட்டது. 2017ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு 2015ஆம் ஆண்டின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அரசியல் தீர்வு வரைபு விரைவில் வரவுள்ளது என்றும் தெரிவித்து ஆதரவளிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கையில் காணாமல் போனோர் அலுவலகம் அமைப்பதற்கு நிதியொதுக்கப்பட்டமையைக் காரணம் காட்டியது. இந்த நேரத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் நெருங்கியதால் தமது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் குறிப்பாக அரசியல் அமைப்பு வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை ஆதரித்தவர்களுக்கும் சிறப்பு நிதியொதுக்கீடாக இரண்டரை கோடியைப் பெற்றுக்கொடுத்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளச் செய்து மிகவும் மோசமான வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவினைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

இந்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிக்க கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் முரண்டுபிடித்துக்கொண்டிருந்த நிலையில் நாட்டில் திட்டமிட்ட வகையில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் அரங்கேற்றப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு நாடகம் அரசாங்கத்தைக் காப்பதற்காக ரணிலுடன் கைகோர்த்து

தொடர்ச்சி ➔

தொடர்ச்சி

வரவு-செலவு திட்டத்தை இம்முறையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு கைமாறாக கம்பரெலிய என்னும் கிராம எழுச்சித் திட்டத்தினூடாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 40 கோடி ரூபாய்க்கு திட்டங்களை முன்மொழிவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிதியை முறையாகச் செலவழிக்கத் தெரியாமல் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழி பிதுங்கி நின்றதைக் காணமுடிந்தது.



தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமை மறுக்கப்பட்ட நிலையில் பிரித்தானியரிடம் இழந்துபோன எமது தேசிய இறைமையை மீண்டும் வென்றெடுக்கப் போகிறோம் என்று புறப்பட்டு அதற்காகவே கட்சிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சி என்று பெயர் வைத்துவிட்டு இன்று அபிவிருத்தி என்ற போர்வையில் மத்திய அரசு வீசும் எலும்புத்துண்டுகளுக்குப் பின்னால் சுய நிர்ணய உரிமைகளை வென்றெடுப்பதற்காக மக்கள் வழங்கிய ஆணையை கிடப்பில் போட்டுவிட்டு ஓடும் பிரதிநிதிகளை என்னவென்று சொல்வது?

அண்மையில் இடம்பெற்ற இஸ்லாமிய மத அடிப்படைவாத பயங்கரவாத தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னரான அரசியல் சூழலில் ரணிலின் அரசாங்கத்தை நெருக்கடியிலிருந்து காப்பதற்கும் சனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை சர்வதேச நெருக்கடிகளுக்குள் சிக்கிவிடாமல் தடுப்பதற்கும் வடக்கு-கிழக்கிற்கான சிறப்பு நிதியொதுக்கீடு என்ற போர்வையில் பனை அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் சுமார் ஐநூறுகோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதன் முதற்பகுதியாக திறைசேரியினூடாக 250கோடி ரூபாய் திரு சம்பந்தனிடம் கையளிக்கப்பட்டதாக படம் காட்டப்பட்டது.

அபிவிருத்திக்காக வாங்கிய பணத்தை குறைந்தபட்சம் ஒரு சிறப்பு அனுமதியினூடாக சில தொழிற்சாலைகளை நிறுவுவதற்காகவாவது பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் இவர்கள் அரசாங்கம் போடவேண்டிய வீதிகளைப் புனரமைப்பதற்கும் சில பொதுநோக்கு மண்டபங்களையும் நூலகங்களை நிர்மாணிப்பதற்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு உதவுவதற்கும் இந்த நிதியை அவரவர் தமது வாக்கு வங்கியை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காக வழங்கியுள்ளனர்.

மாகாணத்திற்கு அதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொடுத்து மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளை அந்த மாகாண அரசு திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு உழைப்பதற்குப் பதிலாக ஏற்கனவே ஐ.தே.கவும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் வடக்கு-கிழக்கில் தமது நியமன நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூலம் மேற்கொண்ட அதே அபிவிருத்திப் பணிகளை தேசிய இன விடுதலையை வென்றெடுப்பதாகக் கூறித்திரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வழங்கி தமிழர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கைகளாலேயே தமிழ் மக்களின் கண்கள் குருடாக்கப்படுகின்றன.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக சர்வதேச மயப்பட்டிருந்த தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை மிகவும் கஷ்டப்பட்டு மீண்டும் உள்நாட்டு அரசியலுக்குள் சிக்கவைத்து இன விடுதலையை மலினப்படுத்திவிட்டார் திருவாளர் சம்பந்தன்.

இலங்கை அரசாங்கம் ஐ.நாவிற்கு வழங்கிய உறுதிமொழிகளைக் காப்பாற்றவில்லை அதனால் அதனை எமது கண்காணிப்பின்கீழ் கொண்டுவருவதற்காக நாம் இலங்கையில் முகாமிடப்போகிறோம் என்று சொல்வதற்குப் பதிலாக சர்வதேச சமூகங்கள் இலங்கையில் மத அடிப்படைவாத பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்து மகாசமுத்திரம் மற்றும் பசிபிக் சமுத்திரத்தின் கடற்பாதுகாப்பு பாதிப்படைந்துள்ளது என்ற காரணங்களை முன்வைத்து இலங்கையில் முகாமிட்டுள்ளன. இதன் மூலம் அவை தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைக் கைவிடத் தீர்மானித்துள்ளனவோ என்ற சந்தேகம் எழுகின்றது.

திருவாளர் சம்பந்தன் ஆட்சி மாற்றத்திற்கு ஆதரவு வழங்கியதற்கு சர்வதேச சமூகத்தின்



அழுத்தங்களும் ஆலோசனைகளும்கூட காரணமாக இருந்தன. சர்வதேச சமூகம் சொல்லியபடியெல்லாம் ஆடிய சம்பந்தன் இப்பொழுதாவது அவர்களுக்கு அழுத்தத்தைக் கொடுத்து தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்குக் கோரவேண்டும். இது அவரது தார்மீக கடமையாகும்.

இனியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பியிருப்பதில் பயனில்லை.

எனவே காலம் தாழ்த்தாமல் மக்களின் நாளாந்த பிரச்சினைகளையாவது முன்னிறுத்தி தமிழ் மக்கள் பேரவை மக்களை அணிதிரட்டி மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வையும் நம்பிக்கையையும் ஊட்டுவதற்கு முன்வரவேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் நிர்க்கதியாக்கப்படுவார்கள் என்பதும் இந்த நாட்டில் அவர்கள் சம அந்தஸ்துடைய பிரசைகளாக வாழ முடியாத நிலை ஏற்படுவதுடன் தமது அடையாளத்தையும் தொலைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் தமிழ் மக்கள் பேரவையினர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் ஆணையை மீறிச் செயற்பட முற்படுவதாகக் கருதியே அதற்கும் சர்வதேச சமூகத்தின் கடமையையும் பொறுப்பையும் நினைவுபடுத்துவதற்குமே தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றதாக அதன் ஆரம்ப நிகழ்வுகளில் கூறப்பட்டது.

இதற்காகவே வடக்கிலும்-கிழக்கிலும் எழுக தமிழ் என்னும் பெயரில் பாரிய மக்கள் பேரணிகளும் நடாத்தப்பட்டன. அதனால் தமிழ் மக்களுக்கு உரிய தலைமையை வழங்குவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் செயற்படும் அரசியல் கட்சிகளை ஒரு பொதுவான கொள்கை அடிப்படையிலும் சர்வதேச ரீதியில் நண்பர்கள் யார் எதிரிகள் யார் பகைவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு அதனடிப்படையில் உறவுகளைத் தீர்மானிக்கிற சக்திகளையும் ஓரணியில் திரட்டி தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கும் பொறுப்பிலிருந்து இனியும் பேரவை விலகியிருக்க முடியாது.

# தீவிரவாதத்தை கூட்டாக எதிர்கொள்வதற்கு இந்தியா - சிறீலங்கா இணக்கம்

தீவிரவாதத்தை கூட்டாக எதிர்கொள்வதற்கு சிறீலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான பேச்சுக்களின் போது, இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அதிகாரபூர்வ கீச்சகப் பக்கத்தில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய சந்திப்புக்குப் பின்னர், வெளியிடப்பட்டுள்ள அந்தப் பதிவில், “சிறீலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேனவை, சந்தித்தேன். பத்து நாட்களில் எமது இரண்டாவது சந்திப்பு இது. தீவிரவாதம் ஒரு கூட்டு அச்சுறுத்தல். அதனை கூட்டாக, மையப்படுத்திய நடவடிக்கையின் மூலம் எதிர்கொள்ள வேண்டும் என சிறீலங்கா அதிபரும் நானும் இணங்கியுள்ளோம்.

பகிர்வான, பாதுகாப்பான எதிர்காலத்துக்காக சிறீலங்காவுடன், பங்காளராக இணைந்து நிற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீள வலியுறுத்துகிறேன்” என இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.



# நான் பொன் சிவகுமாரன் பேசுகிறேன்

தீபச்செல்வன்

பொன் சிவகுமாரன் என்ற மாணவன் யார்? அவர் குறித்து இன்றைய தலைமுறைகள் அறிந்துள்ளனவா? உண்மையில் எமது நிலத்தில் வளரும் ஒவ்வொரு குழந்தையும் சிவகுமாரன் பற்றி அறிந்திருக்க வேண்டும். முள்ளிவாய்க்காலுக்குப் பிந்தைய இன்றைய ஆக்கிரமிப்புக் காலத்தில் பொன் சிவகுமாரனின் தியாகத்தை போற்றியும் உணர்ந்தும் எமது தலைமுறைகள் வாழ வேண்டும். மாணவர்கள் மாத்திரமில்லை. எமது மக்களும் தலைமைகளும் இந்த தியாகியை உண்மையாய் உணர வேண்டும்?

## யார் இந்த சிவகுமாரன்?

இந்த உலகில் தனியொருவனாய் போராடியவர்கள் வெகு சிலரே. பெருங்கதைகளில் வரும் தனித்த நாயகன் போல எவரும் போராட முன் வருவதில்லை. அநீதிகளை கண்டு அதற்கெதிராய் கொதித்தொழுந்து தனி ஒருவனாய் போராடிய வெகு சிலரில் பொன். சிவகுமாரனும் ஒருவர். சிவகுமாரன் ஈழப் போராட்டத்தின் முன்னோடி. ஈழ இளைஞர்களின் முன்னோடி. தமிழ் மாணவர் சமூகத்தின் முன்னோடி. இலங்கை அரசியலில் ஏற்பட்ட சமத்துவமின்மை அநீதிச் செயற்பாடுகளுக்கு எதிராக போராட்டத்தை மிகவும் முக்கிய காலமொன்றில் கையில் எடுத்தவர் சிவகுமாரன்.

இலங்கை சுதந்திரமடைந்து இரு வருடங்களின் பின்னர் அதாவது 1958இல் ஓகஸ்ட் 26ஆம் திகதி பொன். சிவகுாமரன் பிறந்தார். பொன்னுத்துரை அன்னலட்சுமி இவரது பெற்றோர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் உயர்தர மாணவனாக இவர் கல்வி பயின்றார். அக் காலத்தில் கல்வி தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. இது சிவகுாமரனுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஒரு மாணவனாய் தன்னுடைய மாணவ சமூகத்தின் உரிமை மறுக்கப்பட்டு தாம் ஒடுக்கப்பட்டபோது சிவகுமாரன் போராடத்



துணிந்தார். கல்வித் தரப்படுத்தலுக்கு எதிராக தொடங்கிய மாணவர் பேரவையில் அவர் தன்னையும் இணைத்தார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தாக்குதலையும் பொன். சிவகுமாரனே நடத்தினார். கல்வித் தரப்படுத்தலை மேற்கொண்ட சிறிமா ஆட்சியில் அமைச்சரவையில் இடம்பிடித்த யாழ் நகரத் தந்தை அல்பிரட் துரையப்பாவை கொல்வதற்கு அவரது வாகனத்தில் சிவகுமாரன் குண்டு பொருத்தினார். எனினும் துரையப்பா வருவதற்கு முன்பாகவே அந்தக் குண்டு வெடித்தமையால் அதிலிருந்து அவர் தப்பினார். பின்னர் துரையப்பா கொலை முயற்சிக்காக



இரண்டு வருடங்கள் சிவகுமாரன் சிறையில் அடைக்கப்பட்டார்.

அதன் பின்னர் சிறையிலிருந்து வெளியேறிய சிவகுமாரன் தனித் தாக்குதல் முயற்சிகளுடன் உண்ணாவிரதப் போராடட்டம் போன்றவற்றில் தன்னை இணைத்தார். இளைஞர் பேரவையின் உண்ணாவிரதப் போராட்டங்களில் பங்கெடுத்தார். 1970களில் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க அரசில் அமைச்சரவையில் இடம்பெற்ற சோமவீர சந்திரசிறியின் வாகனத்திற்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டில் சிவகுமாரன் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் சிவகுமாரனிடத்தில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியது. படுகொலைகளை நடத்திய சந்திரசிறியை கொலை செய்ய வேண்டும் என்று சிவகுமாரன் வெளிப்படையாக கூறும் நிலையை அடையுமளவில் சினத்திற்குள்ளானார். இதனால் சிவகுமாரன் தேடப்படும் நபரானார். கோப்பாயில் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்ட சிவகுமாரன் காவல்துறையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது சயனைட் அருந்தி தன்னை தானே மாய்த்துக்கொண்டார். யூன் 05 1974 இல் தன்னுடைய 24ஆவது வயதில் தன்னை மாய்த்த சிவகுமாரனின் 44 ஆவது நினைவுதினம் இன்றாகும்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதன் முதலில் சயனைட் அருந்தி உயிர்நீத்தவர் சிவகுமாரனே. இவரே ஈழவிடுதலைப் போராட்டத்தின் முதல் மாவீரர் என்றும் முக்கியம் பெறுகிறார். தமிழ் மக்கள்மீது நிகழ்த்தப்பட்ட இலங்கை அரசின் அநீதிகளுக்கு எதிராக போராடும் வல்லமையை இளைஞர்களிடத்தில் சிவகுமாரன் ஏற்படுத்தினார். இவரது மரண நிகழ்வின்போது முதன் முதலில் பெண்கள் சுடலைக்கு வருகை தந்த மாற்றமும் இடம்பெற்றது. மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் சிவகுமாரனின் மரணம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஈழத் தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரசைகளாகவும் ஈழத் தமிழ் மாணவர்கள் திட்டமிட்ட ரீதியில் ஒடுக்கப்பட்டபோதும் சிவகுமாரன் போராட்டத்தை கையில் எடுத்தார். இலங்கை அரசியலில் ஏற்பட்ட இனப்பிரச்சினையும் அதனால் ஏற்பட்ட கல்வித் தரப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் குறித்தும் தமிழ் மிதவாத தலைமைகளால் எதுவும் செய்ய முடியாதபோது சிவகுமாரன் அகிம்சைப் பாதையிலிருந்து விலகி ஆயுதப் பாதையில் சென்றார். தமிழ் அரசியல் தலைமைகளின் கோரிக்கைகளை ஆளும் சிங்களத் தரப்புக்கள் ஏற்றுக்கொள்ளாமல் ஒடுக்குமுறையை ஈழ மக்களிடத்தில் பிரயோகித்த போது சிவகுமாரன் ஆயுதப் பாதையை கையில் எடுத்தார்.

சிவகுமாரனின் வாழ்வையும் மரணத்தையும் கையில் எடுத்த போராட்டத்தையும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமானது. சாதாரணமாக எல்லா மாணவர்களையும் போல தன் படிப்பில் மாத்திரம் அவன் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அவன் எல்லா மாணவர்களின் படிப்பிலும் கவனம் செலுத்தினான். அவன் எல்லா மாணவர்களின் நலனினும் கவனம் செலுத்தினான். அவன் ஈழ மக்களின் நலனின் கவனம் செலுத்தினான். தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்காதுஇ தொடர்ந்தும் அவர்களை ஒடுக்கியபோது சிவகுமாரன் இப்படியான போராட்டம் ஒன்றே தேவை என உணர்ந்தான்.

## சிவகுமாரனுக்கான உண்மையான அஞ்சலி எது?



கடந்த சில வருடங்களாக சிவகுமாரனின் நினைவு நாட்களும் அரசியல் கட்சிகளின் நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டது. ஒரு மேதினத்தை அரசியல் கட்சி ஒன்று அணுகுவதைப் போல நமது தியாகிகளின் தினங்களும் தியாக நாட்களும் ஆகிவிட்டது. எமது அரசியல் தலைமைகள் சிவகுமாரனின் படத்திற்கு மாலையிட்டு தீபமேற்றி அஞ்சலி செலுத்துவதுடன் அரசியல் கட்சிகள் தமது கடமைகளை முடித்துக் கொள்ளுகின்றன? அவனின் தியாகத்திற்கும் அவனின் கனவுக்கும் என்ன செய்தீர்கள்? என்பதுதான் அவனின் கேள்வியாக உறுத்தும்.

சிவகுமாரனின் சினமும் கேள்வியும் எப்படி இருக்கும்? நான் அன்று எதிர்த்த சிங்களக் கொடிகளை இன்று ஏற்றுகிறீர்கள். எமது இனத்தை அழித்த அரசிற்கு ஆதரவு அளிக்கிறீர்கள். சர்வதேச கூண்டிலில் நிறுத்தி இன அழிப்புக்கு நீதியை பெற வேண்டியவர்களுடன் சுதந்திர தின நிகழ்விலும் போர் வெற்றி நிகழ்விலும் நின்று கொடி ஏந்துகிறீர்கள். எமது இனத்தை இன்றும் திட்டமிட்ட அறிவிக்கப்படாத இன அழிப்பில் கொன்றழிக்கும் அரசை காப்பாற்றுகிறீர்கள்? இப்படியெல்லாம் செய்துவிட்டு எனக்கு வந்து மாலை போடவும் தீபமேற்றவும் எப்படி மனம் வருகிறது? இதுவே அரசின் அநீதியிலும் பெரும் அநீதி. இப்படித்தான் இருக்கும்.

தனி ஒருவனாய் சிவகுமாரன் முன்னெடுத்த போராட்டமே பின்னர் ஈழவிடுதலை ஆயுதப் போராட்டமாக விரிந்தது. சிவகுமாரன் ஏன் ஆயுதத்தை கையில் எடுத்தான் என்பதையும் அவன் எப்படியான காலத்தில் தன் தாக்குதல்களை நடத்தினான் என்பதையும் இன்றைய நாளில் ஆராய்வது மிகவும் அவசியமானது. திட்டமிட்டு போராட்டத்தை சிதைக்க முற்படும் சூழ்ச்சிகள் நடக்கும் எமது மண்ணில் இன்றைய சூழிலில் சிவகுமாரனின் தனிமனித போராட்ட சரித்திரம் நினைவுகூரவும் மதிப்பிடவும் பாடங்களை கற்றுக்கொள்ளவும் வேண்டிய ஒன்றாகும்.

# சீனா-இரசியா எல்லா வகையிலும் ஒத்துழைப்பது அவசியம்

வேல் தர்மா

2019 சூன் 5-ம் திகதி இரசியாவின் சென். பீற்றர்ஸ்பேர்க்கில் நடந்த பன்னாட்டு பொருளாதார மாநாட்டிற்கு சீன அதிபர் ஜீ ஜின்பிங் ஆயிரம் அரசுறவியலாளர்கள் புடைசூழ கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார். அமெரிக்காவின் பொருளாதாரத் தடை, வர்த்தகப் போர் மற்றும் படைத்துறை நெருக்குவாரங்கள் போன்றவற்றை இரசியாவும் சீனாவும் எதிர் கொண்டிருக்கும் வேளையில் இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றதாக அமைந்திருந்தது. 2014 இரசியா கிறிமியாவைத் தன்னுடன் இணைத்த பின்னர் மேற்கு நாடுகள் இரசியா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை எதிர் கொள்ள இரசியா சீனாவுடன் தனது வர்த்தகத்தையும் படைத்துறை ஒத்துழைப்பையும் அதிகரித்ததில் இருந்து இரு நாடுகளுக்கும் இடையில் உறவு மிக நெருக்கமாகிக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்கா பங்குபற்றாமல் தவிர்த்த சென். பீற்றர்ஸ்பேர்க் மாநாட்டில் உரையாற்றிய இரசிய அதிபர் விளடிமீர் புட்டீன் அமெரிக்கா சீனா மீது தொடுத்துள்ள வர்த்தகப் போரும் சீனத் தொடர்பாடல் நிறுவனமான உவாவே மீது அது விதிக்கும் தடைகளும் அமெரிக்காவின் உலகப் பொருளாதாரத்தின் மீதான ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே செய்யப்படுகின்றன என்றார். மேலும் அவர் அமெரிக்காவின் அந்த வலிய நகர்வுகள் உலக வர்த்தகத்தை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன என்றார். ஜீ ஜின்பிங்கும் தன் பங்கிற்கு அமெரிக்காவின் தனியாதிக்கத்தையும் உலகமயமாதலுக்கு எதிரான அதன் செயற்பாடுகளையும் தாக்கியதுடன் இரசியா ஒரே மாதிரியான மனப்பாங்கு கொண்ட நம்பிக்கையான பங்காளி என்றார்.


2016-ம் ஆண்டு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த நோபல் பரிசு மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்காவின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சீன இரசிய கேந்திரோபாய உறவையிட்டு வாஷிங்டன் கவனமாக இருக்க வேண்டும் என்றார். மேலும் அவர் வளரும் அந்த உறவைவிட ஆபத்தான ஒன்று அமெரிக்காவிற்கு இருக்காது என்றார்.

சீன அதிபர் ஜீ ஜின்பிங் அதிகப் பயணங்கள் மேற்கொண்ட தலைநகராக மொஸ்க்கொ இருக்கின்றது. இரசிய அதிபரும் சீன அதிபரும் 27 தடவைகளுக்கு மேல் சந்தித்து உரையாடியுள்ளனர்.

2016-ம் ஆண்டு 69.6பில்லியன் டொலர்களாக இருந்த இரசியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகம் 2017-ம் ஆண்டு 84.2 பில்லியனாகி 2018-ம் ஆண்டு 107.1பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

2016-ம் ஆண்டு சீனாவிற்கு அதிக அளவிலான மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடாக இரசியா உருவெடுத்தது. 2019- ஆண்டு முதல் 2029-ம் ஆண்டு வரை 1.3 ரில்லியன் கன அடி எரிவாயுவை சீனாவிற்கு விற்பனை செய்யும் ஒப்பந்தத்தை இரசியா கைச்சாத்திட்டுள்ளது.

இரசிய மக்களிடையே எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் 54 விழுக்காட்டினர் அமெரிக்காவை வெறுக்கின்றனர். ஆனால் 12விழுக்காட்டினர் மட்டுமே சீனாவை வெறுக்கின்றனர்.




துருவ ஆதிக்கம் என்பது எத்தனை நாடுகள் உலகெங்கும் தமது படைத்துறை மற்றும் பொருளாதார வலிமையால் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது சம்பந்தமானது. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வல்லரசு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் உலகம் இருப்பதை பல்துருவ உலகம் என்பர். 1815இல் இருந்து 1945-ம் ஆண்டு வரை உலகம் பல்துருவ ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அந்தக் கால கட்டத்தில் இருந்த வல்லரசு நாடுகளிடையேயான நட்புறவை பொறுத்து ஆதிக்கச் சமநிலையும் மாறிக் கொண்டே இருந்தது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து பிரித்தானியா, இரசியா, பிரசியா, பிரான்ஸ், டென்மார்க்-ஹங்கேரி ஆகியவை உலக வல்லரசுகளாக இருந்தன. கிறிமியாவை துருக்கியிடமிருந்து மீளப் பெற எடுத்த முயற்சி அப்போது இருந்த பல் துருவ உலகச் சமநிலையில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. பின்னர் ஹிட்லர் தலைமையில் ஜேர்மனி மற்ற வல்லரசு நாடுகளை ஆக்கிரமிக்க எடுத்த முயற்ச்சியால் உருவான இரண்டாம் உலகப் போர் பல் துருவ உலக ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. இரண்டாம் உலகப் போரின் பின்னர் அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் தமது உலக ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்வதில் போட்டியிட்டன. அவை இரண்டின் பின்னால் பல நாடுகள் ஆதரவாக இணைந்து கொண்டன. அது இரு துருவ உலகத்தை உருவாக்கியது.

1991 இல் சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்த பின்னர் அமெரிக்காவின் ஆதிக்கத்தில் உலகம் கொண்டு வரப்பட்டு ஒரு துருவ உலகம் உருவானது. அதன் பின்னர் சீனா சோவியத் ஒன்றியத்திற்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி தனக்கு ஏற்படக்கூடாது என்பதை உணர்ந்து தனது பொருளாதாரக் கொள்கையை மாற்றிக் கொண்டது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக இரசியா தனது படைத்துறை வலிமையை அமெரிக்காவிற்கு சவால் விடக்கூடிய வகையில் வளர்த்து வருகின்றது. 2020-ம் ஆண்டு இரசியாவை உலகின் முன்னணிப் படைத்துறை நாடாக மாற்ற புட்டீனும் 2030-ம் ஆண்டு அதே நிலைய சீனாவை அடைய வைக்க ஜின்பிங்கும் உறுதி பூண்டுள்ளனர். புட்டீனின் திட்டம் பெரிதும் நிறைவேறிவிட்டது என்பதை அவர் உக்ரேனிலும் சிரியாவிலும் மேற்கொண்ட நகர்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இரசியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவில் தடைக்கற்களாக இருப்பவற்றில் முக்கியமானது மத்திய ஆசிய நாடுகளாகும். முன்னாள் சோவியத்ஒன்றிய நாடுகளாக இருந்த மத்திய ஆசிய நாடுகளில் நிலப்பரப்பில் பெரிய கஜகஸ்த்தான் எரிபொருள் யூரேனியம், தங்கம் உட்பட பல கனிம வளங்களைக் கொண்டது. உஸ்பெகிஸ்த்தானிலும் தேர்க்மெனிஸ்த்தானிலும் எரிபொருள் நிறைய இருக்கின்றது. தஜிகிஸ்த்தானிலும் கிரிகிஸ்த்தானிலும் உள்ள மலைகள் தரும் நீரால் விவசாயம் செழிக்கும். பெருமளவு பருத்தி அந்த இருநாடுகளிலும் பயிரடப்படுகின்றன. வேலை என்றால் இரசியாவிற்குச் செல்லும் மத்திய ஆசிய நாட்டுமக்கள் இரசியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த ஐந்து மத்திய ஆசிய நாடுகளும் வடக்கிலும் மேற்கிலும் இரசியாவும் கிழக்கில் சீனாவும் தெற்கில் பாக்கிஸ்த்தான், ஈரான், ஆப்கானிஸ்த்தான் ஆகிய நாடுகளும சூழ இருக்கின்றன. சீனா தனது Belt & Road Initiative என்னும் புதிய பட்டுப்பாதை திட்டத்தில் இந்த நாடுகளை இணைத்து அவற்றின் மூலவளங்களை சுரண்டுவதும் அவற்றில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதையும் இரசியா கரிசனையுடன் பார்க்கின்றது. ஆனால் சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டத்தில் இரசியா முழுமனதுடன் ஒத்துழைக்கின்றது. 2017 சூலை மாதம் இரசிய சீனக் கடற்படைகள் இணைந்து வரலாற்றில் முதற் தடவையாக ஒரு போர்ப்பயிற்சியைச் செய்தன. இரசியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் சீனாவால் இரசியாவிற்கு ஏற்படும் ஆபத்தைச் சமாளிக்க சோவியத் ஒன்றிய காலத்தில் இருந்தே கிழக்கு (Vostok) என்னும் பெயரில் செய்து வந்த போர்ப்பயிற்சியில் 2018-ம் ஆண்டு செப்டம்பரில் சீனப்படைகளையும் இணைத்துக் கொள்ளப்படும் அளவிற்கு சீனாவிற்கும் இரசியாவிற்கும் இடையிலான உறவு சுமூகமடைந்துள்ளது. அமெரிக்காவின் படை வலிமை முக்கியமாக கடற்படை வலிமை, உலகெங்கும் அமெரிக்கா வைத்துள்ள படைத் தளங்கள், அமெரிக்காவிற்கு ஜப்பான் முதல் பிரித்தானியா வரையும் நியூசிலாந்து முதல் பெரு வரையும் இருக்கு நட்பு நாடுகளின் கூட்டம், பல்வேறு நாடுகளுடன் அமெரிக்கா செய்துள்ள படைத்துறை மற்றும் பொருளாதார உடன்படிக்கைகள், உலக நாணயப் பரிமாற்றத்தில் அமெரிக்கா செலுத்தும் ஆதிக்கம், அமெரிக்காவின் தொழில்நுட்ப மேம்பாடு போன்றவற்றை தகர்க்காமல் அல்லது அவற்றிற்கு இணையான நிலையை தாமும் எய்தாமல் இரசியாவோ சீனாவோ இரு துருவ அல்லது பல் துருவ ஆதிக்க நிலையை உருவாக்க முடியாது. அதனால் இரு நாடுகளும் உலக அரங்கில் எல்லா வகையிலும் ஒத்துழைப்பை அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்று.

# கூகுள், பேஸ்புக் "உலகின் நிதித்துறைக்கு நெருக்கடி" சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் எச்சரிக்கை

மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் உலகின் நிதி செயல்பாட்டு அமைப்பு முறைக்கு கணிசமான இடையூறுகளை ஏற்படுத்தக்கூடும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் எச்சரித்துள்ளார்.

பெரும் தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒருங்கே பயன்படுத்தும் வல்லமை மிகுந்த சில நிறுவனங்கள், ஒட்டுமொத்த நிதி உலகின் பரிமாற்றங்களை தனது கட்டுக்குள் வைத்திருக்கும் நிலை ஏற்படக் கூடும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டியன் லகார்டே கூறுகிறார்.

ஜி20 நாடுகளின் நிதியமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் ஜப்பானில் நடைபெற்று வரும் நிலையில் இந்த எச்சரிக்கையை அவர் வெளியிட்டுள்ளார்.

கூகுள் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட உலகின் மிகப் பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் நிதி சார்ந்த சந்தையில் நுழைவதை கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்திட்டங்களை மாற்றியமைப்பது குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, பெரும் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமையகம் அமைந்துள்ள இடத்தில் வரிவிதிப்பதை மட்டும் தவிர்த்து,







அந்த குறிப்பிட்ட நிறுவனம் எங்கெல்லாம் வருவாய் ஈட்டுகிறதோ அங்கெல்லாம் வரி விதிப்பது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

## திருமண பந்தத்தில் தள்ளப்பட்ட 115 மில்லியன் சிறுவர்கள் - யுனிசெஃப் ஆய்வு

உலக அளவில் 115 மில்லியன் ஆண்கள் சிறுவர்களாக இருக்கும் போது திருமணம் செய்து கொண்டவர்கள் என யுனிசெஃப் புள்ளிவிவரம் தெரிவித்துள்ளது

யுனிசெஃப் கடந்த வெள்ளிக்கிழமை குழந்தை திருமணம் குறித்த புள்ளிவிவரத்தை வெளியிட்டது. அதில் உலக அளவில் 115 மில்லியன் ஆண்கள் சிறுவர்களாக இருக்கும் போது திருமணம் செய்து கொண்டவர்கள் என தெரிவித்துள்ளது. அதில் 23 மில்லியன் சிறுவர்கள் 15வயதுக்குட்பட்டவர்கள் என்றும் தெரிவித்துள்ளது.

82 நாடுகளில் சேகரிக்கப்பட்ட தகவலின் படி இந்த புள்ளிவிவரம் வெளியிடப்பட்டுள்ளது. புள்ளிவிவரத்தின் படி மத்திய ஆபிரிக்காவில் 28 சதவிகிதமும், மத்திய அமெரிக்காவின் நிகராகுவா நாட்டில் 19 சதவிகிதமும், கிழக்கு ஆபிரிக்காவின் மடகஸ்கார் நாட்டில் 13 சதவிகித ஆண்களும் சிறுவர்களாக திருமணம் முடித்தவர்கள். அதேபோல் 20 முதல் 24 வயதுக்குட்பட்ட திருமணமான பெண்களில் 5ல் ஒருவர் 18 வயதுக்கு முன்னதாகவே திருமணம் செய்துகொண்டவர்களாக இருப்பதாக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இது குறித்து கருத்து தெரிவித்த யுனிசெபின் நிர்வாக இயக்குநர் ஹென்ரியட்டா, “சிறுவர்கள் மனதளவில் தயாராகாத நிலையிலேயே திருமண பந்தத்துக்குள் தள்ளப்படுகிறார்கள். சிறு வயது திருமணம் அவர்களை சிறு வயதிலே தந்தையாக மாற்றிவிடுகிறது. இதனால் சிறுவர்களாக இருக்கும் போதே அவர்கள் குடும்ப அழுத்தத்தில் சிக்குகிறார்கள்” என்று தெரிவித்துள்ளார்.



## சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒருநாள் இரவு தங்க ரூ.25 லட்சம் கட்டணம்

சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு சுற்றுலா செல்பவர்கள் அங்கு ஒரு நாள் இரவு தங்க நாசா மையத்துக்கு ரூ.25 லட்சம் கட்டணம் செலுத்த வேண்டும். அமெரிக்கா, இரசியா, ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச ஆய்வு மையம் அமைத்து வருகின்றனர். அப்பணியில் சுழற்சி முறையில் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சர்வதேச விண்வெளி ஆய்வகத்தை வர்த்தக ரீதியில் சுற்றுலா மையம் ஆக்க அமெரிக்காவின் நாசா மையம் திட்டமிட்டுள்ளது. அதற்கான அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி ஆண்டுக்கு 2 தடவை சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள். அவர்கள் ஸ்பேஸ் எக்ஸ் உள்ளிட்ட 2 தனியார் நிறுவனங்களின் ராக்கெட்டில் அனுப்பி வைக்கப்படுவர்.

சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு சுற்றுலா செல்பவர்கள் அங்கு ஒரு நாள் இரவு தங்க ‘நாசா’ மையத்துக்கு ரூ.25 லட்சம் கட்டணம் செலுத்த வேண்டும். சுற்றுலா பயணி தங்கவும், உணவு, குடிநீர் மற்றும் உயிர்வாழ தேவையான ஆக்சிஜன் உள்ளிட்ட பல அன்றாட தேவைகளுக்காக வசூலிக்கப்பட உள்ளது. சர்வதேச விண்வெளி ஆய்வகம் செல்வதற்கான சுற்றுலா அடுத்த (2020) ஆண்டு தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனவெறி மற்றும் பாகுபாடுகளை தூண்டும் காணொளிகளுக்கு தடை

இனவெறி மற்றும் பாகுபாடுகளை தூண்டும் வீடியோக்களை தடை செய்யப்போவதாக யூடியூப் நிறுவனம் அறிவித்துள்ளது.

யூடியூப் நிறுவனம் வெறுப்பு பேச்சுகளுக்கான எதிரான கொள்கையை எப்போதுமே கொண்டிருப்பதாக அந்த நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, பாகுபாட்டை ஊக்குவிப்பதற்காக ஒரு இனம் உயர்ந்தது என சித்தரிக்கும் வீடியோக்களை தடை செய்ய முடிவெடுத்திருப்பதாக யூடியூப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த புதிய கொள்கை உடனடியாக அமுலுக்கு வருவதாக தெரிவித்துள்ள யூடியூப் நிறுவனம் அது படிப்படியாக முழுமையாக அமுல்படுத்தப்பட சில மாதங்கள் ஆகலாம். இருப்பினும், படிப்படியாக முழுவதுமாக அமுலுக்கு வந்துவிடும் என




குறிப்பிடப்பட்டுள்ளது. நியூசிலாந்தில் மசூதி ஒன்றில் நடைபெற்ற தாக்குதல் யூடியூபில் நேரலையாக ஒளிபரப்பானதை தொடர்ந்து சமூகவலைதளங்களில் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என உலக தலைவர்கள் குரல் கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து சமூகவலைத்தளங்கள் தாமாக முன்வந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. முன்னதாக, பொள்ளாச்சி பாலியல் விவகாரம் தொடர்பான 90% வீடியோக்கள் நீக்கப்பட்டுள்ளதாக சிபிசிஐடிக்கு யூடியூப் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

மார்பிங் செய்த ஒரு சில வீடியோக்கள் மட்டுமே இருக்கிறது என்றும் யூடியூப் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதே போல், இந்திய விமானி அபிநந்தன் தொடர்பான, 11 வீடியோ காட்சிகளை உடனடியாக நீக்குமாறு யூடியூப் நிறுவனத்தை மத்திய அரசு கேட்டுக்கொண்டது. இதனை ஏற்றுக்கொண்ட யூடியூப் நிறுவனம், அந்த வீடியோ காட்சிகளை நீக்கியது. சட்டப்படி விடுக்கப்படும் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது எங்கள் கொள்கையாக உள்ளது என்று யூடியூபின் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.



# உண்ணாவிரதத்தால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள்

நமது உடலிலிருந்து கழிவுகளை அவ்வப்பொழுது வெளியேற்ற வேண்டும் வெளியேற்றாவிட்டால் அதுவே நோய்க்கான மூல காரணமாகிவிடும். கழிவுகளை வெளியேற்றும் முறைகளில் ஒன்று, நசியம். "தேறுமதியொன்றைக்கோர் தர நசியம் பெறுவோநு" என்று தேரையர், பிணியணுகா விதியில் கூறியுள்ளார். ஒன்றரை மாதத்திற்கு ஒருமுறை நசியம் செய்துகொள்ள வேண்டும்.

## நசியம் என்றால் என்ன?

இதற்கான மூலிகை சாறு, பொடி, எண்ணெய் அல்லது குடிநீர் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை நம் உடல் நிலைக்கு ஏற்ப மூன்று முதல் ஐந்து துளி வரை மூக்குத்துவாரத்தில் விடவேண்டும். இதன்மூலம் கழுத்திற்கு மேல் உள்ள உறுப்புகளில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தலாம். காது, மூக்கு, தொண்டை நோய்கள், மூக்கடைப்பு, சைனஸ், ஒற்றைத் தலைவலி, தலைமுடி உதிர்வது, தொண்டையில் தசை வளர்ச்சி, தோள் வலி போன்றவற்றுக்கு தீர்வு கிடைக்கும். வேலைப்பளுவினால் வரும் கோபம், பதற்றம் போன்ற உணர்வுகளாலும் தலைவலி, மன இறுக்கம் உண்டாகிறது. நசியம் செய்வதால், மன இறுக்கம் குறையும்.

நசியம் செய்வது எப்படி?

தலையை கீழ்புறமாக சாய்த்து மூக்கின் ஒரு துவாரத்தை அடைத்துக்கொண்டு ஒரு சிட்டிகை பொடியை அல்லது ஒரு துளி எண்ணெய்யை இன்னொரு துவாரத்தில் வைத்து மூச்சோடு இழுக்கவும். இவ்வாறு மறு நாசித் துவாரத்திலும் செய்யவும். மருந்து தொண்டையில் இறங்கும். அதை துப்பி விட வேண்டும். இப்படிச் செய்வதால், நரம்பு மண்டலம், தலை, இவைகளில் சேர்ந்துள்ள துர் நீர் அனைத்தும், சளி, தும்மல் மூலம் மூக்கின் வழியாக வெளியேறிவிடும்.

நாசித் துவாரம் வழியாகதான் நாம் சுவாசிக்கும் காற்று நுரையீரலுக்கு செல்கிறது. மூக்கின் உட்பகுதியில் உள்ள திசுக்கள் மூளை மற்றும் நரம்பு மண்டலத்துடன் தொடர்புடையவை. எனவே அந்தப் பாதையை சுத்தமாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியம். அதற்கு நசியம் உதவுகிறது. நசியம் செய்வதற்கு துளசி, கரிசாலை, தும்பை போன்ற சாறு வகைகளும், சுக்கு தைலம் போன்றவைகளும் பயன்படுத்தப்படுகிறது. காலையில் எழுந்தவுடன் நசியம் செய்யவேண்டும். நசியம் செய்து அரைமணி நேரம் கழித்து குளிக்க வேண்டும்.

## உண்ணாவிரதம்

உடலிலுள்ள நச்சுப் பொருட்களை அகற்றுவதற்கான வழிமுறைகளில் ஒன்று, உண்ணாவிரதம். சித்த மருத்துவத்திலும், யோகப் பயிற்சியிலும் உண்ணாநோன்பு முக்கிய இடம் பெறுகிறது. உணவைத் தயாரிப்பதிலும், பெறுவதிலும், உண்பதிலும், செரிப்பதிலுமே நமது நேரமும், சக்தியும் அதிகம் செலவாகிறது. சில வகை உணவுகள் நம் மூளையை மந்தமாக்கி நம் மன நிலையை பாதிக்கும் இயல்புடையது. எனவே தான் சில நாட்களில் நம் நேரமும், சக்தியும் அதிகம் வீணாகாமல் தவிர்க்க எளிதில் செரிக்கக்கூடிய உணவை உட்கொண்டோ அல்லது உணவை முற்றிலும் தவிர்த்தோ உண்ணாவிரதம் இருக்கின்றோம். இதனால் நேரமும், சக்தியும் சேமிக்கப்படுகின்றன. புத்தி கூர்மையாகிறது. மனம் தூய்மையாகி ஒருமுகப்படுகிறது.


எந்த ஒரு எந்திரமும் ஓய்வின்றி உழைத்தால் பழுதடைவது இயல்பு. உடலுக்கும், உள்ளத்திற்கும் அவ்வப்போது பூரண ஓய்வு என்பது அவசியம். உண்ட உணவை செரிக்கச்செய்யும் ஜீரண வேலைக்கு, உயிராற்றலின் பெரும் பகுதியை செலவழிக்க வேண்டியுள்ளது. தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருக்கும்போது உடலின் உயிராற்றலும் ஓயாது இயங்கவேண்டியதாகிவிடுகிறது. இதற்கு ஓய்வு கொடுப்பதுதான் உண்ணாவிரதம்.

மாதம் ஒருமுறை அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை உண்ணாவிரதம் இருக்கலாம். ஏகாதசி, சஷ்டி, கிருத்திகை போன்ற தினங்களில் நம் முன்னோர்கள் விரதம் கடைப்பிடித்தனர். விரத காலத்தில் நீரைத் தவிர வேறு எதையும் பருகக்கூடாது. பழங்களை மட்டும் சாப்பிடலாம். இவ்வாறு மாதம்இருமுறை செய்வதால் உடல் இயக்க சக்தி குறைந்து, நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாவதாக ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

வாரத்தில் ஒரு நாள், காலை மற்றும் இரவு உணவை நீக்கி மதியம் ஒருமுறை மட்டும் உணவு உட்கொள்வதும் சிறந்தது. இதன் மூலம் மந்தம் நீங்கி உடல் சுறுசுறுப்படையும். இதை தான் 'பட்டினி பெரு மருந்து' என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். உண்ணாவிரதத்தினால் உடலின் உள்காயங்கள் குணமாகும். வளர்ச்சி ஹார்மோன்களின் சுரப்பு அதிகரிக்கும். உடல் கொழுப்பு கரையும். தசைகள் வளரும். குறைபாடுள்ள செல்கள் பழுதுபார்க்க தூண்டப்படும். செல்களில் உள்ள உபயோகமற்ற பொருட்கள் வெளியேற்றப்படும். நோய் எதிர்ப்பு சக்தி மேம்பட்டு, ஆயுள் அதிகரிக்கும். மூளையில் புதிய நியூரான்களின் உற்பத்தி தூண்டப்படும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள், அதிக ரத்த அழுத்த பாதிப்புகொண்டவர்கள், இருதய நோயாளிகள், கர்ப்பிணி பெண்கள் போன்றவர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது.

**- டாக்டர் இரா.பத்மபிரியா,**
சித்த மருத்துவர், சென்னை.



# கைகளை பாதிக்கும் செல்போன்

செல்போன்களை உபயோகப்படுத்துவதற்கே பெரும்பாலான சிறுவர்-சிறுமியர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். புத்தகங்கள் பென்சில்களை கையாள்வதைவிட செல்போன்களை உபயோகப்படுத்துவதற்கே பெரும்பாலான சிறுவர்-சிறுமியர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். செல்போன்களை நீண்ட நேரம் கைகளிலேயே வைத்திருப்பது கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். பிற்காலத்தில் தங்களுடைய அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு கைகளை பயன்படுத்துவதற்கு சிரமங்களை சந்திக்க நேரிடும்.

ஒருசில அறிகுறிகளை கொண்டே அவர்களின் கைகள் பலவீனமாக இருப்பதை அறிந்து கொள்ளலாம். பொதுவாகவே எழுதுவது ஓவியம் வரைவது அதில் வண்ணங்கள் தீட்டுவது போன்ற செயல்களை சிறுவர்கள் ஈடுபாட்டோடு செய்வார்கள். அவர்களது கைகள் பலவீனமாக இருந்தால் பென்சில்களை சீராக கையாள்வதற்கு சிரமப்படுவார்கள். நோட்டில் எழுதும்போது அவர் களது கையெழுத்தை வைத்தே கைகளின் வலிமையை கண்டறிந்துவிடலாம். கைவிரல்கள் வலியாகவோ பலவீனமாகவோ இருந்தால் அவர்கள் எழுதும் எழுத்துக்கள் அழுத்தமாக இருக்காது. மெல்லிய கோடுகளை போல தென்படும்.

அவர்கள் சாப்பிடும் வழக்கத்தை கொண்டும் கைகளின் செயல்திறனை அளவிட்டு விடலாம். சாப்பிடும் டிபன் பாக்ஸ்களை திறப்பதற்கு சிரமப்படுவார்கள். தண்ணீர் பாட்டிலை திறக்கவும் கைவிரல்கள் சிரமப்படும்.

சாப்பிடும்போது உணவுகளை சிந்திக்கொண்டிருப்பார்கள். பாதணிகளை அணியும்போது கால்களை அதற்குள் நுழைப்பதற்கு சிரமப்படுவார்கள். பாதணிகளை கைவிரல்களை கொண்டு கட்டுவதற்கும் தடுமாறுவார்கள். அதுபோல் சட்டையில் பட்டன்களை மாட்டுவதற்கும் திணறுவார்கள். விளையாட்டு பொருட்களை பயன்படுத்தி விளையாடும் ஆர்வம் குறைந்து போய்விடும். சவர்க்காரம் போட்டு கைகளை கழுவுவதற்கும் தடுமாறுவார்கள்.